"ஈசன் நெறிபரப்ப இன்தமிழ் வளர்ப்போம்"

# கலசம்


# KALASAM

தை - மாசி - பங்குனி - 2009



"வழிபிறக்கும்; வழிபடுவோம்"

இலண்டனிலிருந்து இலவசமாக வெளிவரும் முதல் ஆன்மிகக் காலாண்டிதழ்


தரமான தங்கத்திற்கு
இலண்டனிலே சிறந்த இடம்
LAKSHMIS JEWELLERS
276 High Street North London E12 6SA UK
Tel : 020 8470 5600 Fax : 020 8470 3448

மணி 17

# கலசம்
# KALASAM

ஒலி 61

www.smsuk.info
E-mail: kalasam @ gmail.com

## தொண்டு புனிதமானது

'என் கடன் பணிசெய்து கிடப்பதே' என்பர் நாவுக்கரசர். 'ஓடும் செம்பொனும் ஒக்கவே நோக்கும்' இயல்பினர் அவர். அதனால் அவரின் தொண்டும் புனிதமாக இருந்தது. அவரின் வழிநின்று அப்பூதி அடிகளும் தாம் செய்த தொண்டுக்குப் புனிதம் சேர்த்தார்.

ஊதியத்துக்கு வேலை செய்வதானாலும் சரி, உள்ளன்போடு தொண்டு செய்வதானாலும் சரி, அதைச் செய்பவருக்குத் தாம் என்ன செய்கிறோம், ஏன் செய்கிறோம், எப்படிச் செய்யவேண்டும் என்பன போன்ற விவரங்கள் தெரிந்திருக்க வேண்டும். குழந்தை நலம் பேணுவது, முதியோரைப் பாதுகாப்பது போன்ற சமூகத் தொண்டுகள் ஒரு வகை. சிவாலயங்களை நடத்துவது, சமய வழியிற் தொண்டாற்றுவது என்பது இன்னொரு வகை. இவர்கள் அனைவரும் தாம் செய்பவற்றைப்பற்றி ஓரளவாவது தெரிந்து வைத்திருக்கவேண்டும். அல்லது தெரிந்தவரிடம் கேட்டு அறியவேண்டும். அத்துடன் எந்தத் தொண்டு செய்கிறோமோ அதற்கு எம்மைத் தகுதியுள்ளவராகவும் நாம் ஆக்கிக்கொள்ளவேண்டும்.

சமூகத்திலே தொண்டு செய்வோர் பலர். இவர்கள் புனிதமான தொண்டு செய்கிறார்கள். செய்வதை அறிந்து செய்கிறார்கள். கவனத்தோடும், கட்டுப்பாட்டோடும், கண்ணியத்தோடும் செய்கிறார்கள். ஆனால், சிலர் தொண்டு செய்வதுபோன்ற ஒரு தோற்றத்தை மட்டும் தமக்காக அமைத்தவர்கள். தங்கள் அந்தஸ்தை உயர்த்த, சமூகத்திலே மதிப்புப் பெற, தொண்டு செய்வதை ஒரு கருவியாக்கியவர்கள். எது எப்படி நடந்தாலும் இவர்களுக்குக் கவலை இல்லை. தெரியாத விடயங்களை அறிவதிலும் இவர்களுக்கு ஆர்வம் இல்லை. இந்தச் சிறுபான்மையான தொண்டர்களால் உண்மைத் தொண்டர்கள் அவமதிக்கப்படுகிறார்கள்.

சைவ ஆலயங்களில், சமய நிறுவனங்களில் அறங்காவலராக இருப்பவர்கள் சைவசமய விடயங்களைத் தெரிந்திருத்தல் நல்லது. இவர்கள் உளத்தாலும் உடலாலும் செயலாலும் தூய்மையாக இருக்கவேண்டும். கோயில்கள் சேவைக்காக அன்றி வர்த்தகத்துக்காக அமைந்தவை அல்ல. தொண்டர்களுக்கு 'கண்ணப்பன் ஒப்பதோர் அன்பு' இருக்க வேண்டுமேயன்றி, கண்ணப்பன் செய்த அனைத்தையும் நாம் செய்யலாம் என்ற எண்ணம் இருக்கக்கூடாது. தொண்டு புனிதமானது. அப்புனிதத்தை நாம் போற்றுவோம்.

\- ஆசிரியர்

**நிர்வாகக் குழு:** திரு. க. ஜெகதீசுவரன் (ஆசிரியர்) திரு. ச. ஆனந்ததியாகர் திரு. சி. தம்பு
திரு. சி. அற்புதானந்தன் திரு. சு. வைத்தியநாதன் திரு. வ. இ. இராமநாதன்

**தொடர்பு முகவரி:** SMS 2 Salisbury Road London E12 6AB. Tel/Fax: 020 8514 4732

# இந்த இதழில்


| | |
|---|---|
| பெருமையும் உயர்ச்சியும் - கந்தபுராண சிந்தனைகள் | 03 |
| ஆனைக்கும் அடிசறுக்கும் | 07 |
| திருநீலநக்கர் - பெரியபுராணத் தொடர் | 11 |
| மோதிர விரலிலே தருப்பை போடுவதேன்? | 13 |
| எழுத்துப் பிழை அற.... | 14 |
| படித்தவர் பகன்றவை | 15 |
| டென்மார்க்கில்.... சைவத் தமிழ்ப் பெருவிழா | 16 |
| மனித வாழ்வில் ஜோதிடம்... | 18 |
| இன்குரல் இசையிற் பண்ணிசை - விமரிசனம் | 22 |
| இலங்கையர்கோன் - சில நினைவுகள் | 26 |
| சிவமுகூர்த்தங்கள் | 31 |
| நீற்றறை குளிர்ந்த அற்புதம் | 33 |
| உள்ளே என்ன இருக்கு? | 36 |
| சிறுவர் கலசம் | 37 |

# பெருமையும் உயர்ச்சியும்

**(கந்தபுராணச் சிந்தனைகள்)**

சிந்திப்பவர் Dr சங்கரப்பிள்ளை சிவலோகநாதன்

இவ்வுலகத்திலே சாமானியராகப் பிறந்து, வளர்ந்து கல்வி கேள்விகளில் வல்லவராகியோ, பெருநிதியம்தேடியோ அல்லது இரண்டினாலுமோ சமூகத்திலே உயர் அந்தஸ்திலேயிருந்து பிறகு ஆணவ வயப்பட்டவராய்த் துர்ப்பழக்கங்களுக் கட்டுபட்டு, அவ்வளங்களெல்லாவற்றையும் இழந்து, இழிபெயர் கேட்டு சாமானியராக முடிகின்ற பலரைக் காண்கின்றோம். அதே சமயம், சாமானியராகப் பிறந்து, கல்வி கேள்விகளில் வல்லவராகியோ, பெருநிதியம் தேடியோ அல்லது இரண்டினாலுமோ சமூகத்திலே ஓரளவுக்கு வசதியாகவும் வாழ்ந்து, அடக்கமாக இருந்து பலருக்கும் 'பழமரம் உள்ளூர்ப் பழுத்தாற்போல்" பயனுடையவராக இருந்து பெரிய மனிதன் என்ற பெயரோடு வாழ்கையை நிறைவாக்குபவர்களையும் காண்கிறோம். கந்தபுராணம் காட்டும் சைவத் தமிழ்க் கலாசாரம் இந்த இரு வகையினரையும் இனம் காட்டுகிறது. அவர்களின் செய்கைகளை ஆராய்வதனாலே நாம் பெருமையையோ உயர்ச்சியையோ அடைந்து கொள்ளலாம். இதற்கான இரண்டு நாயகர்களைப் பார்ப்போம்.

## முதல் நாயகன் தக்கன்

சத்தியலோகத்திலே "பிரம்ம தேவர் தன்னுடைய பிரதானியர் சூழ வீற்றிருக்கிறார். அப்போது "தேவருடைய தலைவராகிய, ஞான முதல்வராகி மும்மூர்த்திகளில் உயர்ந்தவராகி, இறுதி இல்லாத ஒருவராகி, உயிர்கள் தோறும் உயிராகி அவற்றை விட்டு எக் காலத்தும் நீங்காதவராகி இருக்கும் முழுமுதற் கடவுளாக விளங்கும் சிவபெருமானை, யான் விளங்கும் படி விளக்குவீராக" என அவருடைய மகனான தக்கன் கேட்கிறான். மகிழ்ச்சியடைந்த பிரம்மா "மகனே! திருமாலினாலும் என்னாலும், அடிமுடி காண முடியாதபடி அழலாகத் தோன்றிய

> உயர்ச்சியை நோக்கிச் சென்ற தக்கன் பெரு முயற்சியால் முதலில் மேன்மையை அடைந்தான். ஆனால் உயர்நிலையை அடைந்த தக்கனால் பெருந்தன்மையாக இருக்க முடியவில்லை. ஆணவ வசப்பட்டு தன்னுடைய யாகத்திற்கு வந்தவர்களையும் இன்னலுக்குட்படுத்தி அழிந்தான்.

பெருமானே முழுமுதற் கடவுள். படைத்தல், காத்தல், அழித்தல், மறைத்தல், அருளல் என்னும் பஞ்ச கிருத்தியத்திற்கும் அவரே கர்த்தா. அவரை வணங்கியே சகலஅந்தஸ்துக்களையும் முத்தியையும் அடையலாம்" என்று சொல்கின்றார். இவ்வாறு தந்தை சொன்னதும் தக்கனுடைய மனதிலே ஒரு திட்டம் உருவாகியது. அதன்படி ஊழ்வினை காரணமாக முதன்மையான வீடு பேற்றை அடையும் வழியை நினைக்காது, "நான்முகன் முதலானவரை விட மிக்க தவம் செய்து முடிவற்ற வளங்களை எல்லாம் அடைவேன்" என அவன் நினைத்தான். அதாவது உயர்ச்சியை விரும்பினான். அதற்காகச் சிவனை நோக்கிக் கடுந்தவம் செய்தான். சிவபெருமான் நேரே தோன்றினார். என்ன வரம் வேண்டுமெனக் கேட்டார். பூமி, மேலுலகம், பிரம்மதேவரின் உலகம், விஷ்ணு பகவானின் உலகம் ஆகிய எல்லா உலகிலும் தன்னுடைய

**தைப்பொங்கல் சிறப்பிதழ்**

ஆணை செல்ல வேண்டுமெனவும், சிவனை வணங்குமுயிர்களெல்லாம் தன்னையும் வணங்கவும், தேவர்கள், அவுணர்கள் எல்லோரும் ஏவல் செய்யும்படியும், அன்னை பராசக்தி மகளாக வரும்படியும் வரம் கேட்டுப் பெறுகிறான் தக்கன். வரம் பெற்ற தக்கன் பெருவாழ்வு வாழ்கிறான். ஆயிரம் குமாரர்கள் பிறக்கிறார்கள். அவர்களைச் சிவபெருமானை நோக்கித் தவம் செய்து தந்தையாரான பிரம்மா, செய்யும் படைத்தல் தொழிலைத் தமதாக்கும்படி அனுப்பினான் தக்கன். நாரதமுனிவரின் உபதேசத்தால் அவர்கள் தவம் செய்து முத்தி அடைந்தனர். பார்வதி அவனுக்கு மகளாக வருகிறாள். சிவபெருமானுக்கும் பார்வதிக்கும் நடந்த திருமணம் குழப்பத்தில் முடிகின்றது. அவனுக்குச் சிவபெருமானுடன் கோபம் மூள்கிறது. அவருக்கு அவிகொடுக்காது யாகமொன்றைத் தொடங்குகிறான் தக்கன். தன்னுடைய உயர்ச்சிக்கு மூலகாரணமான சிவபெருமானையே எதிர்க்கிறான். ததீசி முனிவர் பல நல்லுரைகள் சொல்லுகிறார். அவன் முனிவரைப் பார்த்து "இங்கு நீங்கள் பலவற்றையும் சொல்வதாற் பயனில்லை. கயிலாய மலையில் வீற்றிருக்கும் உம் இறைவன் பகவனே ஆயினும் ஆகுக. அந்தச் சிவனுக்கு நான் வேள்வியின் அவியை அளிக்க மாட்டேன். நீங்கள் பேசியது போதும் போங்கள். நான் எடுத்த காரியத்தை முடிப்பேன்" என்று சொல்கிறான்.

முனிவகேள் பலவும் ஈண்டு மொழிவதிற் பயனென் வெள்ளிப்
பனிவரை உறையும் நுங்கோன் பகவனே எனினு மாக
அனையவன் தனக்கு வேள்வி அவிதனை உதவேன் நீயும்
இனியிவை மொழியல் போதி என்செயல் முடிப்பன் என்றான்.

- அனந்தன் சாப நீங்கு படலம் 33

தக்கன் தொடர்ந்து யாக்தை நடாத்துகின்றான். யாகம் வீரபத்திரக் கடவுளால் குழப்பப்பட்டு தக்கனும் கொல்லப்படுகிறான். பிறகு பார்வதியின் வேண்டுகோளின்படி ஆட்டுத்தலையுன் தக்கன் மீளுயிர் பெறுகிறான்.

இவ்வாறாக, உயர்ச்சியை நோக்கி சென்ற தக்கன் பெரு முயற்சியால் முதலில் மேன்மையை அடைந்தான். ஆனால் உயர்நிலையை அடைந்த தக்கனால் பெருந்தன்மையாக இருக்க முடியவில்லை. ஆணவ வசப்பட்டு தன்னுடைய யாகத்திற்கு வந்தவர்களையும் இன்னலுக்குட்படுத்தி அழிந்தான்.

## இரண்டாது நாயகர் அகத்தியர்

அகத்தியர் பெருந்தவம் செய்து மிகவும் வலிமை கொண்ட ஒரு முனிவர். சிவனுடைய திருக்கல்யாணத்துக்கு, கணங்கள், முனிவர்கள், தேவர்கள் எல்லோரும் சென்றதனாலே தாழ்ந்த வடபாகத்தைச் சமன் செய்யச் சிவபெருமானால் பொதியமலைக்கு அனுப்பப்பட்ட பெருமை

அகத்தியர் தன்னுடைய கட்டுப்பாட்டில் நிற்றலாகிய தவநிலையை உறுதி செய்யும் வரத்தையே வேண்டினார். பெரிய பதவிகளையோ, வசதிகளையோ, அல்லது செல்வத்தையோ வேண்டவில்லை. அவர் தன்னுடைய கட்டுப்பாட்டில் நின்றும் தவறவில்லை. அதனால் அவர் என்றும் அழியாப் பெருமை பெற்றார்.

கொண்டவர். ஏழு கடல்களையும் வற்றிப்போகும் படி அதனை ஆசமனஞ் செய்தவர். விந்த கிரியைப் பாதாளஞ் சேர்த்தவர். அவருடைய கமண்டலத்திலே காவிரி நதி அடங்கியிருந்தது. காவிரி நதியை அவருடைய கமண்டலத்தில் சிவபெருமான் கொடுக்கப் பெற்றுக்கொண்டவர். இந்தக் காவிரி நதியை அக்தியருடன் செல்லுமாறு சிவபெருமான் பணித்தார். அப்போது

அந்தக் காவிரி நதியானது பெண்ணாகிய யான் ஆணாகிய இவரோடு போவது தகுதியாகாது என்று சிவபெருமானிடம் முறையிட்டது. அதற்குப் பதிலாக "இந்த முனிவன் திரிபு இல்லாத உள்ளத்தையுடையவன். தீமை, நன்மை என்ற இரண்டிலும் தொடர்பில்லாத நேர்மை பெற்ற அறிவுடையவன். எம் அடியவர்களுக்குள் சிறந்தவன். ஆதலால் நீ இவனுடன் செல்லலாம்" என இறைவனாலே பரிந்துரை செய்யப்பட்டவர்.

திரிபில் சிந்தையன் தீதுநன் கிற்படா
ஒருமை கொண்ட உளத்தன்நம் மன்பருள்
பெரியன் ஈங்கிவன் பின்னுறச் செல்கெனா
அருள்பு ரிந்தனன் ஆலமி டற்றினான்.

- அகத்தியப்படலம் 22

இவ்வாறு ஒழுக்க சீலரெனச் சிவபெருமானால் உரைக்கப்பட்ட பெருமைக்குரியவர் அகத்தியர். அகத்தியரின் கமண்டலத்திலிருந்து காவிரியை விடுவித்தால் தேவேந்திரன் தன்னுடைய பூஞ்சோலையை வரட்சியினாலான அழிவிலிருந்து காக்கலாமென்று நாரதர் சொல்கிறார். அக்காரியத்தை விநாயகப்பெருமான் மூலம் நிறைவேற்றும்படி புத்திமதியும் சொல்கிறார் நாரதர். அதன்படி இந்திரன் விநாயகப்பெருமானை வணங்கிக் காவிரி நதியை அகத்தியரின் கமண்டலத்திலிருந்து விடுவித்துத் தருமாறு வேண்டுகிறான். விநாயகர் காக வடிவெடுத்து கமண்டலத்தைக் கவிழ்த்து விடுகிறார். கோபமடைந்த அகத்தியருடன் சிலநேரம் விளையாடிய பின் விநாயகப்பெருமான் அவருக்குமுன் காட்சி கொடுக்கிறார். விரும்பிய வரம் கேட்கும்படி சொல்கிறார். "தங்களிடத்தும் அந்த நெடிய திருமால் அறிந்து கொள்ளாத சிவபெருமானிடத்தும் மிக்க அன்புடையவனாக இருக்கும் தன்மையை அருளுக" என அகத்தியர் வேண்டுகிறார்.

நின்பா லினும்அந் நெடுமா லுணரான்
தன்பா லினுமே தமியேன் மிகவும்
அன்பா வதொர்தன் மையளித் தருள்நீ
இன்பால் அதுவெ:. குவன்எப் பொழுதும்

- காவிரி நீங்கு படலம் 52

சுருங்கச் சொல்லின் அவர் தன்னுடைய கட்டுப்பாட்டில் நிற்றலாகிய தவநிலையை உறுதி செய்யும் வரத்தையே வேண்டினார். பெரிய பதவிகளையோ, வசதிகளையோ, அல்லது செல்வத்தையோ வேண்டவில்லை. அவர் தன்னுடைய கட்டுப்பாட்டில் நின்றும் தவறவில்லை. அதனால் அவர் என்றும் அழியாப் பெருமை பெற்றார்.

இவ்வாறாக இந்த இரண்டு நாயகர்களின் சாதனைகளையும் ஒப்பு நோக்கும் போது பெரும் பண்புக்கு இலக்கணமாக இருப்பவர்களைச் சிறப்புத் தேடிச் செல்லும் என்பதையும், உயர்ச்சியை நோக்கிச் செல்பவர்கள் ஆணவ வயப்பட்டு அழிந்து போகிறார்கள் என்பதையும் கண்கூடாகக் காணக்கூடியதாகவுள்ளது. கந்தபுராணம் பண்பாளர்களாக இருப்பவர்களை பெருமை உடையவர்களை, மாத்திரமே பெருமைப் படுத்துவதையும் உணர முடிகின்றது.

சிந்தனைகள் தொடரும்.........

**Commercial & Industrial Guarding**
**Call now for a free survey and quotation**

**SECURITY GUARD WANTED**

- **Retail**
- **Construction**
- **24 Hour Radio Patrols**
- **Key Holding**
- **Access Control**
- **CCTV**

# CHARTER SECURITY

A Professional Service Every Time

**1st Floor**
**Cambridge Road**
**Barking**
**Essex**
**IG11 8NR**

**Tel: 020 8507 7717**
**Fax: 020 8507 7702**

# ஆணைக்கும் அடிசறுக்கும்

## திரு. க. உமாமகேசுவரன்

கம்பராமாயண மேடையிலே பல வகையான பாத்திரங்கள் உலவுகின்றன. ஒவ்வொரு பாத்திரம் ஒவ்வொரு வகையிலே தனித்துவம் உடையதாகத் திகழுகின்றது. கும்பகருணன் என்ற பாத்திரம் இவை அனைத்திலும் பார்க்கத் தனித்தன்மை வாய்ந்ததாகத் தனிச்சிறப்புடன் மிளிருகின்றது. அந்தப் பாத்திரம் கம்பனுக்கே மிகமிகப் பிடித்த பாத்திரம் போலும். பல இடங்களிலே கம்பனின் அபிமானத்துக்குரிய புதல்வனாகவே கும்பகருணன் காணப்படுகின்றான். வீரத்தில் இராமாவதார காப்பிய நாயகன் இராமனையும் அவன் விஞ்சியவன். அப்படித்தான் கம்பன் அவனைச் சித்தரிக்கின்றான். இரண்டே இரண்டு சந்தர்ப்பங்களை மட்டும் நாம் பார்க்கலாம்.

கும்பகருணனுக்கும் அநுமனுக்கும் இடையே போர் மூண்டுவிட்டது. அநுமன் ஒரு மலையை எடுத்துக் கும்பகருணன் மீது எறிகிறான். "இந்த மலை உன்னைத் தாக்கியதும் நீ இறந்துபடாவிட்டால் இனி உன்னோடு போர்புரியேன்" என்று வஞ்சினம் வேறு கூறுகிறான். நடந்ததுதான் என்ன? அதைக் கம்பனே சொல்லட்டும்.

இளக்கமொன் றின்றி நின்ற வியற்கைபார்த் திவன தாற்றல்
அளக்குறற் பாலு மாகா குலவரை யமரி னாற்றா
துளக்குறு நிலைய னல்லன் ***சுந்தரத் தோளன் வாளி***
***பிளக்குமேற் பிளக்கு*** மென்னா மாருதி பெயர்ந்து போனான்

எவ்விதத் தளர்ச்சியும் இன்றிக் கும்பகருணன் நின்றான். அநுமன் இவனது ஆற்றலை அளவிடவும் முடியுமோ என்று அதிசயித்தான். மலைகளே இவனுடன் போர் புரியினும் ஆற்றாது பின்வாங்கிவிடும். இலகுவில் தோற்கடிக்கப்பட இயலாதவன் இவன். இராமபாணமே பிளக்க முடிந்தால் அல்லவோ இவனைப் பிளக்கக்கூடும் என்று எண்ணியவாறு - போரில் இராமனது வெற்றி குறித்தே சந்தேகித்தவாறு - அவ்விடம் விட்டகன்றான் அநுமன் என்கிறான் கம்பன்.

***இராமனால் வெல்லப்பட முடியாதவனோ கும்பகருணன் என்ற ஐயம் தழுவிய அச்சத்தை அநுமன் வாயிலாகக் குறிப்பாகப் புலப்படுத்திய கம்பன், இராமனும் கும்பகருணனும் போரிட்டபோது புறமுதுகிட்டான் இராமனென வெளிப்படையாகவே புலப்படுத்திவிடுகிறான். இதை அவன் இராமாயண கதா பாத்திரம் ஒன்றின் வாயிலாகக்கூடக் கூறவில்லை. விஷயத்தின் கனதி கருதிப்போலும் தானே நேரில் வந்து கூறிவிடுகிறான். விழித்த கண்ணையும் விதிர்ப்புற்ற கையையும் சாட்சிக்கு வேறு அழைத்துவிடுகிறான்.***

> போரிலே எதிரி எறிகின்ற அல்லது ஏவுகின்ற ஆயுதங்கள் தனக்கு எதிரே வருகின்றபோது சுத்தவீரன் தன் கண்ணை இமைக்கக்கூடாது. போர் என்றதும் சினத்தோடு விழித்த விழிநோக்கை மாற்றவே கூடாது. அப்படி மாற்றிவிட்டால் - கண்ணை இமைத்துவிட்டால்- புறமுதுகிட்டுவிட்டதாக அர்த்தம் என்று பண்டைத் தமிழ் நூல்கள் கூறுகின்றன.

இராமனும் கும்பகருணனும் ஒருவரை ஒருவர் எதிர்கிறார்கள்; எதிர்க்கிறார்கள். கொடியதொரு போர் ஆரம்பமாகிவிட்டது. கும்பகருணனின் படை முழுமையாக அழிந்துவிட்டது. அவன் தனி ஒருவனாய் நிற்கிறான். ஆனாலும் தளராது போர் புரிகிறான். இராமன் விட்ட அம்பால் அவன்

வலக்கை அற்றது. அவன் கலங்கவில்லை. மாறாக, "அற்று வீழ்ந்தகை அறாதவெங்கையினால் எடுத்து"க் குரங்குக் கூட்டத்தைக் குமைத்தான். இராமன் "காத்துடன் நிற்கவும்" அவன் வானரப் படையைக் கும்பகருணன் கொன்று குவிப்பதை வியந்து உலகு நோக்கியது; அஞ்சியது. "உள்ள கையினும் அற்றவெங் கரத்தையே அஞ்சின உலகெல்லாம்"

இராமன் கும்பகருணனின் எஞ்சிய கையையும் கால்கள் இரண்டையும் கூடத் துணித்துவிட்டான். இராமனின் அம்புகள் வேகமாக வந்து தன் கைகளையும் கால்களையும் அறுத்துத்தள்ளி உடலைச் சல்லடைக் கண்களாகத் துளைத்த போதிலும் கும்பகருணனின்,

***"செய்ய கண்பொழி தீச்சிகை யிருமடி சிறந்தது"*** என்கிறான் கம்பன்.

முன்பைவிட இரண்டு மடங்கு தீச்சுவாலை சிந்தக் கும்பருணன் விழித்தான் என்றால் விழித்த கண்ணை இமைக்கவில்லை என்பதுதானே பொருள். கும்பகருணன் பற்றி இப்படிக் குறிப்பிடும் கம்பன், கும்பகருணனோடு போர் புரிகையில் இராமனுக்கோ கை நடுங்கிவிட்டது என்கிறான். கைகளும் கால்களும் இழந்த கும்பகருணன் அருகில் மூங்கில்கள் அடர்ந்து செழித்த ஒரு மலை. அதை நாவினால் வளைத்து, ஆகாயத்தை அளாவும்படி ஏந்திப் பின் அகலத் திறந்த குகைபோலும் தன் வாயினால் இராமனை நோக்கி வீசுகிறான். பேய்கள் ஆரவாரிக்கும் போர்க்களம் எரிந்தெழும்படி மலையொன்று தன்னை நோக்கி வரக்கண்ட இராமனின் கைகள் நடுங்குகின்றன. இக்காட்சியை,

தீயி னாற்செய்த கண்ணுடை யானெழுஞ் சிகையினாற் றிசைதீய
வேயி னாற்றிணி வெற்பொன்று நாவினால் விசும்புற வளைத்தேந்தி
பேயி னார்ப்புடைப் பெருங்கள மெரிந்தெழப் பிலந்திறந் ததுபோலும்
வாயி னாற்செல வீசினன் வள்ளலும் மலர்க்கரம் விதிர்ப்புற்றான்

[(தீயினாற்செய்த கண்ணுடையான்- கும்பகருணன், சிகை-தீச்சுவாலை, வேய்-மூங்கில், வெற்பு-மலை, விசும்பு-ஆகாயம், பிலம்-குகை, வள்ளல்-இராமன், விதிர்ப்பு-நடுக்கம் ("அதிர்வும், விதிர்ப்பும் நடுக்கம் செய்யும்" தொல்.சொல்: 3.16)]

எனக் கம்பன் விவரிக்கிறான்.

போரிலே எதிரி எறிகின்ற அல்லது ஏவுகின்ற ஆயுதங்கள் தனக்கு எதிரே வருகின்றபோது சுத்தவீரன் தன் கண்ணை இமைக்கக்கூடாது. போர் என்றதும் சினத்தோடு விழித்த விழிநோக்கை மாற்றவே கூடாது. அப்படி மாற்றிவிட்டால் - கண்ணை இமைத்துவிட்டால் - புறமுதுகிட்டுவிட்டதாக அர்த்தம் என்று பண்டைத் தமிழ் நூல்கள் கூறுகின்றன.

மிகப் பழந்தமிழ் இலக்கியங்கள் எனப்படுபவை சங்க இலக்கியங்கள். கிடைத்திருக்கும் சங்க இலக்கியங்களில் எட்டுத்தொகை பத்துப்பாட்டு என்ற இரு பெரும்பிரிவில் அடங்குகின்றன. எட்டுத்தொகையிலே வருவதொரு நூல் புறநானூறு. அங்கே ஔவை பாடிய பாடல் ஒன்று வருகிறது.

அரசன் போருக்குப் புறப்படுமுன் வீரர்களோடு விருந்துண்பான். மதுவும் வழங்கப்படும். மது வழங்கப்படும்போது மிகச் சிறந்த வீரனுக்கே முதலில் வழங்கப்படவேண்டும் "இவன்தான் முதலிலே மதுவைப் பெறும்தகுதி வாய்தவன்" என்று புலவர் சிபாரிசு செய்ய வேண்டும். இத்தகையதொரு சந்தர்ப்பத்திலே சிபாரிசு செய்பவராக ஔவை அமைகிறார்.

"வேந்தே கள்ளை முதலிலே இவனுக்குத்தான் வழங்கவேண்டும். நீ கூட அவன் உண்டபின்பு தான் உண்ணவேண்டும். ஏன் தெரியுமா? இவன் தந்தையின் தந்தை, உன் தந்தையின்

தந்தைக்கு எதிரே வந்த வேலைக் கண் இமைக்காது நின்று தன் மார்பில் ஏற்று வீரமரணம் எய்திய பெரும் புகழாளன். அவன் பெயரனாகிய இவனும் பகைவர் உன்மீது எறியும் வேலைக் கண் இமைக்காது நின்று தன் மார்பில் ஏற்பான்; உன்னைக் காப்பான்."

இவற்கீத் துண்மதி கள்ளே சினப்போர்
இனக்களிற் றியானை யியறேர்க் குரிசில்
நுந்தை தந்தைக் கிவன்றந்தை தந்தை
எடுத்தெறி ஞாட்பி னிமையான்.........
மறப்புகழ் நிறைந்த மைந்தினோ னிவனும்....
மறைக்குவன் பெருமநிற் குறித்துவரு வேலே
(எடுத்தெறி ஞாட்பு-படைக்கலங்களை எடுத்தெறியும் போர்)

என்று தன் சிபாரிசுக்குரிய வீரனைத் தான் சிபாரிசு செய்வதற்கான காரணத்தை ஔவை கூறும்போது, கண் இமைக்காது படைக்கலங்களை எதிர்கொள்ளும் வீரம் ஒப்பற்ற வீரம் என்றும் அது பரம்பரையாக வருவதோர் பண்பு என்றும் வலியுறுத்தத் தவறவில்லை.

புறநானூறு இங்ஙனம் போற்றும் இவ்வீரப் பண்பை, சுத்தவீரருக்கான இலக்கணமாகவே ஆக்கிவிட்டது திருக்குறள்.

விழித்தகண் வேல்கொண் டெறிய அழித்திமைப்பின்
ஓட்டன்றோ வன்க ணவர்க்கு.

[வேல்கொண்டு எறிய-(எதிரி) வேலால் எறிய, விழித்தகண்-(போர்புரியவெனச் சினத்தொடு) விழித்துப்பார்த்த கண்ணை, அழித்திமைப்பின் -(சினத்தொடுகூடிய முந்திய நோக்கை) மாற்றி இமைத்தால், வன்கணவர்க்கு-கொடியவரான வீரருக்கு, ஓட்டன்றோ - (தாம்)புறமுதுகு இட்டதாக ஆகிவிடுமன்றோ!]

திருக்குறள் கூறும் சுத்த வீரருக்கான இந்த இலக்கணத்தைப் பெருங்கதை, சீவகசிந்தாமணி முதலிய காப்பியங்களில் வரும் பாத்திரங்கள் இடையேயும் நாம் காணமுடிகிறது.

வேலுங் கணையமும் வீழினும் இமையார்
வீரியத் தறுகணர்

[கணையம்-வளைதடி, (Boomerang போன்றதாகலாம்) வீரியம்-பராக்கிரமம், தறுகணர்-அஞ்சத் தக்கனவற்றிற்கும் அஞ்சாத கொடியவர்]

இகலிடை இமையா எரிமலர்த் தடங்கண்
புகழ்வரை மார்பன்
(இகல்-போர்)

என்றிவ்வாறு வரும் பெருங்கதைப் பாடற் பகுதிகளும்

ஆரமருள் ஆண்டகையும் அன்னவகை வீழும்
வீரரெறி வெம்படைகள் வீழ இமையான்.....

ஏந்தல்தன் கண்கள்வெய்ய இமைத்திட எறிதல் ஓம்பி
நாந்தக உழவன்நாணி நக்குநீ அஞ்சல் கண்டாய்
காய்ந்திலேன்.....

[ஏந்தல்-மகதையார் கோன், எறிதல் ஓம்பி-(வாளை)வீசுதலைத் தவிர்த்து, நாந்தகம்-வாள், நாந்தக உழவன்-சீவகன் தம்பி நபுலன் (சச்சந்தன் காமக்கிழத்தி மகன்), நக்கு -சிரித்து]

என்றிவ்வாறு வரும் சீவசிந்தாமணிப் பாடற் பகுதிகளும் அதற்கான சான்றாதாரங்களாய் விளங்குகின்றன. இனி, நம் கவனத்தை ஈர்த்து, நம்முன் நிற்பவை, விடையை அவாவும் வினாக்கள் சில:

- கும்பகருணன் இராமன் போரிலே, பழந்தமிழ் இலக்கியங்களான புறநானூறு, சீவகசிந்தாமணி, பெருங்கதை, திருக்குறள் என்பன காட்டும் போர் இலக்கணத்தின்படி இராமன் புறமுதுகிட்டவன் ஆகானா?
- கண்களை இமைத்தாலே புறமுதுகிட்டதாய் ஆகும் என்றால் கையே நடுங்கிவிட்ட பின்பும் புறமுதுகிட்டதாக ஆகாதா?!
- "ஒருமொழி ஒழிதன் இனங்கொளற் குரித்தே" என்ற விதிப்படி, சோறுண்டான் என்றால் கறியும் உண்டான் என்ற பொருள் பெறப்படுவதுபோல் "மலர்க்கரம் விதிர்ப்புற்றான்" என்றால் கண்ணும் விதிர்ப்புற்றதாக - இமைத்ததாக - ஆகாதா?
- தன் காவியத்தின் நாயகனான இராமன், புறமுதுகிட்டான் என்ற அபவாதச் சேற்றிலே சிக்குண்டு அவமானமுறும்படி, கம்பன் ஏன் சித்திரிக்கவேண்டும்?
- கம்பன் என்ற ஆனைக்கே அடிசறுக்கிவிட்டதா?!

"காமஞ் செப்பாது கண்டது மொழிமோ"

# இசையில் வேறுபாடு ஏன்?

மாமன்னர் அக்பருக்கு ஆஸ்தானவித்துவான் தான்சேனிடம் மிகுந்த மதிப்பு உண்டு. ஒருநாள் அவர் தான்சேனிடம், "உன் குருவை இங்கே வந்து பாடச்சொல்ல முடியுமா?" என்று கேட்டார். "என் குரு பாவா ஹரிதாஸ் இங்கே வரமாட்டார். நாம்தான் அவரிடம் போகவேண்டும்." என்று தான்சேன் கூறினார்.

அக்பர் தான்சேனை அழைத்துக்கொண்டு பாவா ஹரிதாஸின் குடிலுக்குச் சென்றார். அங்கே அவரது இசையைக் கேட்டு அக்பர் மெய்ம்மறந்தார்.

சில நாள்களுக்குப் பின் தன்னுடைய சபையில் தான்சேன் பாடியபோது அக்பர், "தான்சேன், உன் குரு எவ்வளவு நன்றாகப் பாடுகிறார். அவரது பாட்டுடன் ஒப்பிட்டால் உனது பாட்டு சப்பென்று இருக்கிறதே?" என்று கேட்டார்.

அதற்கு தான்சேன், "அரசே, நான் உங்களுக்காகப் பாடுகிறேன். அவர் பகவானுக்காகப் பாடுகிறார். இதுதான் காரணம்!" என்றார் நிதானமாக. அக்பர் கப்சிப்!

க சு மணியன் - பெரணமல்லூர்
நன்றி: சக்தி விகடன்

# திருநீலநக்க நாயனார்

மூ.சிவராசா

**சி**வபூசை இருவகைப்படும்: ஒன்று ஆன்மார்த் பூசை, மற்றது பாரார்த்த பூசை. ஒருவர் தனது ஆன்ம ஈடேற்றத்துக்காக உரிய தீட்சைபெற்று தான் தெரிந்தெடுத்துக் கொண்ட சிவலிங்கத்துக்கு வாழ்நாள் முழுவதும் நாள்தோறும் மூன்றுவேளைகளிலும் செய்யும் பூசை ஆன்மார்த்த பூசை. லோகக்ஷேமத்துக் காகவும் ஏனைய ஆன்மாக்கள் கடைத்தேறவும் கோயில்களில் பிரதிஷ்டை செய்யப்பட்டுள்ள சிவலிங்கம், பிறமூர்த்தங்களுக்கு அவர் செய்வது பாரார்த்த பூசை. பரார்த்த பூசை செய்பவர் முதலில் ஆன்மார்த்த பூசை முடித்திருத்தல் வேண்டும். பூசையின் போது செய்யப்படும் முக்கிய அம்சங்கள் அக்கினி காரியம், அபிஷேகம், நிவேதனம், தூபதீப ஆராதனை அர்ச்சனை முதலானவையாம்.

காவிரி நதியின் தென்கரை நாடுகளில் சாத்த மங்கை என்ற தலத்தில் அவதரித்தவர் நீலநக்கர் என்னும் அந்தணர். அவர் ஆன்மார்த்த பூசைக்கென தமது இல்லத்தின் ஒருபகுதியில் சிவலிங்கப் பிரதிஷ்டை செய்திருந்தார். சந்நிதானத்தில் அக்கினி காரியத்துக்கான யாககுண்டம் ஒன்று அமைக்கப்பட்டிருந்தது. இந்தப் பகுதிக்கு ஆசௌசம் உடையவர்களோ, தீண்டத்தகா தவர்களோ சமீபித்தல் ஆகாது. யாக குண்டத்தில் காருகபத்தியம், ஆகவநீயம், தக்ஷிணாக்கினி எனப்படும் முத்தீக்களும் வளர்க்கப்படும். அவர் ஆன்மார்த்த பூசை செய்வதோடு சிவனடியார்களைத் திருவமுது செய்வித்தல், அவர்களுக்குத் தொண்டு செய்தல் போன்றவற்றையும் கைக்கொண்டிருந்தார்.

சாத்தமங்கையில் சிவபெருமான் கோயில் கொண்டு எழுந்தருளியுள்ள இடம் அயவந்தி. நீலநக்கர் அங்கு சென்று பூசை செய்வதும் உண்டு. ஒரு திருவாதிரை நட்சத்திர நாளில் அவர் ஆன்மார்த்த பூசையை முடித்துக்கொண்டு அயவந்திநாதரைப் பூசிப்பதற்குச் சென்றார். கூடவே பூசைக்கு வேண்டிய உபகரணங்கள் சிலவற்றை மனைவியார் எடுத்துச் சென்றார். சுவாமிக்கு அபிஷேகம், நிவேதனம், தூப, தீப ஆராதனை, அர்ச்சனை ஆகியவற்றைச் செய்து பின் ஸ்ரீ பஞ்சாட்சர ஜபம் செய்யத் தொடங்கினார். மனைவியார் பக்கத்தே நின்று கொண்டிருந்தார். சிறிது நேரத்தில் அயவந்தி நாதரின் மீது சிலந்து ஒன்று விழுந்து ஊர்ந்து சென்றது. இதைக் கண்ட மனைவியார் தாய்மை உணர்வோடு சிலந்தி விழுந்த இடத்தை ஊதி எச்சில் உமிழ்ந்தார். ஒரு **குழந்தை மீது சிலந்தி ஒன்று விழுந்தால் சிலந்தியின் விஷம் குழந்தையை உறுத்தாமல் இருப்பதற்காக தாய் அந்த இடத்தில் எச்சில் தடவுதல் வழக்கம். சூடான பொருள் ஒன்றை நம் குழந்தை தொட்டுவிட்டால் அந்த விரலை எம் வாயில் வைத்து எச்சிபடுத்துவதில்லையா?** அதே போல அம்மையாரும் சிவலிங்கம் என்று எண்ணாமல் குழந்தைப் பாசத்துடனேயே அவ்வாறு அநுசிதம் செய்தார். இதைப் பார்த்த நீலநக்கர் சிவலிங்கத்தின் மீது எச்சில் உமிழ்ந்து அசூசிப்படுத்தினார் என்பதாக மனைவியாரைக் கோபித்துக் கடிந்ததோடு, தம்மைவிட்டுப் போய்விடுமாறு விரட்டிவிட்டார். பயந்தவரான அம்மையார் கோயிலின் வேறொரு பக்கத்தில் ஒதுங்கிக் கவலையோடு விழித்திருந்தார். நீலநக்கர் பூசையை முடித்து வீடு திரும்பி இரவு நித்திரை செய்தார். அப்போது அவர் கனவில் அயவந்திநாதர் தோன்றி,சிலந்தி விழுந்த இடத்தில் எச்சில் பட்டதால் எவ்வித ஊறலும் ஏற்படாமலும், அது ஊர்ந்து சென்ற இடங்கள் கொப்புளங் கொண்டிருப்பதையும் காண்பித்து நீலநக்கர் மனைவியாரின் தாயன்பை விளக்கினார். நீலநக்கர் கனவு கலைந்து எழுந்து தமது பிழைக்கு வருந்தி இறைவனைத் துதித்தார். அதிகாலையில்

திருக்கோயிலுக்குச் சென்று மனைவியாரைச் சமாதானப்படுத்தி வீட்டிற்கு அழைத்து வந்தார். சிலகாலம் செல்ல. தலயாத்திரை செய்து கொண்டு சிவதொண்டர்களோடு ஒரு நாள் திருஞானசம்பந்த மூர்த்தி நாயனார் அயவந்தி நாதரைத் தரிசிக்க சாத்தமங்கை வந்தார். சுவாமி தரிசனை முடிந்தபின் நீலநக்கர் இல்லத்தில் மாகேசுரபூசையை ஏற்றுக் கொண்டார். அன்று இரவும் அங்கேயே தங்க வேண்டியதாயிற்று. சம்பந்தப் பெருமானோடு வந்த அடியார்களுள் திருநீலகண்ட யாழ்பாணரும், அவர் மனைவி பாடினியாரும் இருந்தனர். பாணனார் சம்பந்தப்பெருமான் தலங்கள் தோறும் அருளும் தேவாரப் பாடல்களுக்கு அநுசரணையாக யாழ் வாசிப்பதும், பாடினியார் குரல்கொடுப்பதும் ஆகிய தொண்டுகளை மேற்கொண்டிருந்தனர். பாணர்குலம் தாழ்ந்த குலமாகக் கொள்ளப் பட்டிருந்தது. அன்று இரவு இவர்களும் நீலநக்கர் வீட்டில் தங்கவேண்டியிருந்தது. சம்பந்தப் பெருமான் நீலநக்கரை அழைத்து இவர்களுக்கும் வீட்டில் தங்குவதற்கு ஓர் இடம் ஒதுக்கிக் கொடுக்குமாறு கேட்டுக் கொண்டார். "ஆவுரித்துத் தின்றுழலும் புலையரேனும் கங்கைவாழ் சடைக்கரந்தார்க்கு அன்பராகில் அவர் கண்டீர் நாம் வணங்கும் கடவுளாரே" என்பதற்கிணங்க நீலநக்கர் அவர்கள் தங்க யாககுண்டத்தின் அருகிலேயே இடம் ஒதுக்கிக் கொடுத்தார். குலபேதம் பார்க்காது சிவனடியார்கள் என்றே அங்ஙனம் அவர் செய்தார். அவர்களின் பத்தி உயர்வை வெளிப் படுத்துவதுபோல யாக குண்டத்தில் எரிந்துகொண்டிருந்த அக்கினி வலம் சுழித்து எரிந்து நல்ல சகுனத்தைக் காட்டிற்று. இது கண்ட சம்பந்தர் முதலாய யாவரும் எம்பிரான் திருவருளை வழுத்தி ஆனந்த பரவசமானார்கள். அடியார் திருக்கூட்டம் மறுநாள் சாத்த மங்கையிலிருந்து புறப்பட்டுத் தமது தலயாத்திரையைத் தொடர்ந்தது, நீலநக்கர் தமது கொள்கையைக் கடைப்பிடித்து சிவபூசை, அடியார் பூசை செய்து கொண்டிருந்தார். திருஞானசம்பந்தப் பெருமானது திருக் கல்யாணத்தைத் தரிசிக்கச் சென்ற நீலநக்கர் அங்கு தோன்றிய சிவாக்கினியில் பிரவேசித்து இறைபதம் எய்தினார்.

"சலம் பூவொடு தூபம் மறந்தறியேன்
தமிழோடிசை பாடல் மறந்தறியேன்
நலம் தீங்கிலும் உன்னை மறந்தறியேன்
உன்நாமம் என்நாவில் மறந்தறியேன்"

-அப்பர்சுவாமிகள்

# திரு. சூரிப்பிள்ளை பாலகிருஷ்ணன்

ஈழம் கரவெட்டியில் பிறந்த திரு. சூரிப்பிள்ளை பாலகிருஷ்ணன் அவர்கள் கடந்த 2008 டிசம்பர் மாதம் 21ஆம் திகதி சிவபதமடைந்தார். நமது சங்கத்தின் தற்போதைய தலைவர் திரு. பாலசிங்கம் அவர்களின் சகோதரரான இவர் சைவ முன்னேற்றச் சங்கத்தின் செயற்பாடுகளில் எப்பொழுதும் தமது உதவிகளைத் தயங்காது நல்கி வந்தவர். மனைவி திருமதி. வாசுகி, பிள்ளைகள் - பிரணவன், பானுஜா, பிரகலாதன் ஆகியோருக்கு எமது ஆழ்ந்த அநுதாபத்தைத் தெரிவித்துக்கொள்கின்றோம். இவ்வுலகை விட்டுச்சென்ற திரு. பாலகிருஷ்ணன் அவர்களின் ஆன்மா சாந்தியடைய, 'கலசம்' குடும்பம், எல்லாம் வல்ல ஸ்ரீ சிவகாமசுந்தரி உடனுறை ஸ்ரீ சிதம்பரேஸ்வரரைப் பிரார்த்திக்கின்றது.

# மோதிரவிரலிலே தருப்பை போடுவதேன்?

**பலரும் கேட்கும் கேள்வி இது.**

மோதிரவிரலுக்கு ஏனைய விரல்களுக்கு இல்லாத ஒரு தனி மதிப்புண்டு. கையில் இருக்கும் ஐந்து விரல்களையும் தனித் தனியாக ஒவ்வொன்றாக மடக்கிப் பாருங்கள். மோதிரவிரல் மட்டும் மசியாது. அதாவது இதைப் பூரணமாக மடக்க முடியாது. இதைப்போன்று பின்புறமாக (extend) பண்ணினாலும் பூரணமாக மடக்கமுடியாது.

**சைவமுன்னேற்றச் சங்கத்தின் 31ஆவது ஆண்டு நிறைவு விழாவில் "தத்துவாமிர்தமணி" எனும் பட்டமளித்துக் கௌரவித்தபோது சைவப்புலவர்- சிவஸ்ரீ பா. சர்வேஸ்வரக்குருக்கள் B.A. Hons அவர்கள் அதனை ஏற்று ஆற்றிய உரையிலிருந்து**

**தொகுத்தவர்: சாவகச்சேரியூர் டாக்கர். க.கதிர்காமநாதன்.**

இதயத்திற்கும் இவ்விரலுக்கும் நேரடி சம்பந்தம் இருப்பதாக-ஒரு காதல் சின்னமாக சிலர் கருதுகின்றர். இவ்விரல் வியாதி களைக் குணப்படுத்தும் போது ஒரு மந்திர (Magic) விரலெனக் கருதுகின்றனர். இதனால் இந்த விரலுக்கு (digitus Medicinalis) என்ற பெயரும் உண்டு. Medicine Budha- வைத்திய புத்தர் என்பவர் வலது கை மோதிரவிரலையே வியாதிகளைக் குணப் படுத்த உபயோகித்தார். மோதிரவிரல் ஏனைய விரல்களிலும் பார்க்க உணர்ச்சி கூடியது. இந்த விரலுக்கு மட்டும்தான் இரு வகை நரம்புகள் (ulnar & median nerves) தோலின் உணர்ச்சிகளை - உணர்வுகளைக் கொடுக்கின்றன. மேலும் இவ்விரலுக்கு வளைக்கும் தசை பக்கத்தில் இருக்கும் நடுவிரலோடும், சின்னவிரலோடும் சம்பந்தப் பட்டதால் தான் 'மசியாமல்' இருக்கிறது.

தர்ப்பை எனும் புல் புனிதமானது. இது சங்கற்பம் செய்யும்போதும், சிரார்த்தம் செய்யும் போதும் இன்னும் பல இந்துசமயக் கிரியை முறைகளிலும் முக்கிய பங்கு ஏற்கும். இது தவிர இதற்கு மின் கடத்தும் தன்மை உண்டு. அருச்சுனனின் கோரிக்கைக்கு இணங்க துரோணர் தர்ப்பைப் புல்லை எறிந்து பந்தை கிணற்றிலிருந்து எடுத்தார் எனக் கதையுண்டு. ஆதி காலத்தில் 88,000 முனிவர்கள் ஆன்மிகவாதிகள் பிரம்மாவை தாங்கள் தவமிருக்க உகந்த இடம் ஒன்றை அருளும் படி வேண்டினர். பிரம்மா தர்ப்பை ஒன்றை எடுத்து நேமி (சக்கரம்) ஒன்று செய்து அதனை உருட்டி 'இதன் பின் செல்க, எவ்விடம் நிற்குமோ அவ்விடமே தவம் செய்க' என்று கூறினார். தர்ப்பை நின்ற இடம், நைமிசாரண்யம் என்று ஐதிகம். நேமி- சக்கரம், ஆரண்யம்-காடு

இத்தகைய தர்ப்பைப் புல்லை மோதிர விரலில் அணியும்போது அதைப் பவித்திரம் என்பர். இதன் நோக்கம் கிரியை செய்யும் போது மனம், வாக்கு, காயங்களால் ஏற்படும் பாவங்களிலிருந்து காப்பதே. பவித்திரம் = பதனாத் த்ராயதே, பாவத்திலே விழுவதினின்று காப்பது. அறிவும், ஆற்றலும், பண்பும், பரிவும் கொண்ட வசந்தன் ஐயா அவர்கள் "மோதிரவிரலில் தர்ப்பை போடுவது சோதனைக்குச் செல்லும் மாணாக்கன் (Admission) நுழைவுச்சீட்டு பெறுவது போன்றது" எனக் கூறுகிறார்.

இந்து சமயமுறைப்படி இடது கை அவ்வளவு புனிதமாகக் கருதப்படுவது இல்லை. இதனால் வலது மோதிரவிரலிலேயே

தர்ப்பை அணிவர். ஆண்கள் வலது கையிலும், பெண்கள் இடது கையிலும் அணிகின்றனர். சில கோயில்களிலே பெண்களும் வலது மோதிர விரலில் அணிகின்றனர். விபூதி பிரசாதத்தை வலது கையால் பெறும் இவர்கள் அக்கையிலேயே அணிந்தால் என்ன?

நாங்கள் வலது கை மோதிரவிரலாற் புருவமத்தியில் சந்தனம், குங்குமம் பொட்டாக இடல் வேண்டும். புருவ மத்தியை தியானம் செய்வோர் ஞானக்கண் எனவும், யோகாசனத்தில் சுழுமுனை எனவும் கூறுவர். இது மின்கடத்தும் தன்மை யுடையது. ஆதலால் அன்பே சிவமாகிய சிவனை சந்தன பொட்டாகவும், அவரை ஆட்டுவிக்கும் சக்தியை குங்குமமாகவும் இட்டு அருள் பெறுவோமாக.

உலக மக்கள் யாவரும் சிறுவிரலுக்குப் பக்கத்திலிருக்கும் விரலிலே தமது பிரேமை, காதல்-அன்புச் சின்னமாகிய மோதிரம் அணிவர். இதை விட, திருமண நிச்சயதார்த்தம், திருமணம் போன்ற சுபவைபவங்களிலும் மோதிரம் போடுவர். இதனாற்றான் இதை மோதிர விரல் என்பர். உணர்வு, உணர்ச்சி, தனித்தன்மை மிகுந்த இவ்விரலில் தர்ப்பை(பவுத்திரம்) அணிவது மிகவும் பொருத்தமானதே.

## எழுத்துப் பிழையற.......

எழுத்துப் பிழையற என்ற பகுதி திருமுறைப் பாடல்களைப் பிழையின்றிப் பாடவேண்டும் என்ற நோகிக்கிலேயே ஆரம்பிக்கப்பட்டது. ஆனால் தேவாரத்தோடு சைவசமய விவரங்களையும் அது புகுத்துகிறது என்பது வாசகர் ஒருவரிடமிருந்து கடிதம் பெற்றபோது புரிந்தது. படித்தவர் பகன்றவை பகுதியில் அக்கடிதம் உள்ளது.

இனி இந்த இதழில், தமது கணவர், பாண்டிய மன்னன் சமணத்தைத் தழுவியிருந்தது பிடிக்காத மங்கையர்க்கரசியார் திருஞானசம்பந்தரை மதுரைக்கு அழைத்து கணவரை மீண்டும் சைவராக்கிய சரிதையைப் பெரியபுராணத்தில் அறியலாம்.

மதுரைக்குத் திரு ஆலவாய் என்றும் பெயருண்டு.

மங்கையர்க்கரசி என்ற தேவாரத்திலே "வரிவளக் கைமட மானி" என்றும் "அங்கையர்க்கண்ணி" என்றும் "வளவர்கொன்பாவை" என்றும் பாடுவதை நாம் கேட்கலாம்.

சரியான தேவாரம் இதோ!

மங்கையர்க் கரசி வளவர்கோன் பாவை
வரிவளைக் கைம்மட மானி
பங்கயச் செல்வி பாண்டிமா தேவி
பணிசெய்து நாள்தொறும் பரவ
பொங்கழல் உருவன் பூதநா யகன்நால்
வேதமும் பொருள்களும் அருளி
அங்கயற் கண்ணி தன்னொடும் அமர்ந்த
ஆலவா யாவதும் இதுவே

# பழத்தவர் பகன்றவை

கடந்த கலசம் இதழில் 'சிறுதெய்வம் சேர்வோம் அல்லோம்' என்ற கட்டுரை வந்திருந்தது. தேவாரம், திருவாசகம், திருப்பல்லாண்டு, சிவஞானசித்தியார், ஆகிய பாடல்களிலிருந்து மேற்கோள் காட்டி அநுராதா அவர்கள் எழுதியிருப்பது நன்றாக இருந்தது. சைவசமயக் கருத்தைக் கட்டுரை வலியுறுத்துகிறது.

**திரு. கண்ணப்பன்** - கொளும்பு

அடிக்க வேண்டுமென்று அச்சடிக்கும் பல பத்திரிகைகள், சஞ்சிககள் வருகின்ற இந்தக் காலத்தில் படிக்கவேண்டுமென்று வெளிவரும் 'கலசம்' இதழ் கண்டேன். எல்லா வயதினருக்கும், ஏற்றமாதிரி விடயங்கள் வருகின்றன. குறிப்பாக அப்பூதியடிகள் கட்டுரைக்குக் கீழே உள்ள துணுக்கு சிரிக்கவும், சிந்திக்கவும் வைத்தது. உங்கள் பணி தொடரட்டும்.

**திரு. மனோகரன்** - மோர்டன், சறே

கலசம் 58ஆவது இதழிலே "எழுத்துப்பிழை அற" என்ற தலையங்கத்தில் கணபதியின் தோற்றம் பற்றியுள்ள கதைகளின் கருத்து வாசர்களிடம் இருந்து எதிர்பார்ப்பதாகக் குறிப்பிடப்பட்டிருந்தது. எமது விரதங்களில் ஒவ்வொரு தெய்வத்துக்கும் ஒவ்வொரு குறிப்பான விசேஷமான விரதங்களுண்டு. உதாரணமாக முருகனுக்கு கந்தசஷ்டி விரதம் போல, விநாயகருக்குப் பிள்ளையார் பெருங்கதை என்ற இருபத்தொரு நாள் விரதமுண்டு. அந்நாள்களில் விரதம் விரும்பி நோற்போர் தினமும் பிள்ளையார் கதை படிப்பதுண்டு. அக்கதையிலே பிள்ளையார் தோற்றம் பற்றிக் குறிப்பிடப்பட்டுள்ளது. சிவனும் பார்வதியும் திருமணம் முடிந்த பின்பு செல்லும் வழியில்,

'மதகரி உரித்தோன் மதகரியாக
மதர்விழி உமைபிடி வடிவம தாகிக்
கூடிய கலவியிற் குவலயம் விளங்க
நீடிய வானோர் நெறியுடன் வாழ
அந்தணர் சிறக்க.......
வெங்கரிமுகமும் வியன்புழைக் கையோடு
ஐங்கர தலமும் மலர்பதம் இரண்டும்.......
பேழைபோல் அகன்ற பெருங்குட வயிறும்
நெற்றியில் நயனுமும் முப்புரி நூலுங்
கற்றைச் சடையும் கனக நீண்முடியுந் தங்கிய
முறம் போல் தழைமடிச் செவியும்
ஐங்கரத்து அண்ணல் வந்து அவதரித்தலும்...... (பெருங்கதை)

என்று விநாயகர் அவதரித்ததாக கதை உண்டு. துரதிருஷ்ட வசமாக யானையின் தலையைச் சீவிப் பிள்ளையின் உடம்பில் சிவன் பொருத்தி, பிள்ளையார் உருவாகினதாகவும் ஒரு கதை பேச்சுவாக்கில் உலாவுகின்றது. கருத்தாழமுள்ள ஆன்மிகமான கதைகளைக் கேட்டால் மனதுக்கு மிகவும் சந்தோஷமாக இருக்கும் என்பது அடியேன் கருத்து. நன்றி

**தாவடிக் கனகம்மா**

**(நாம் கேட்டது எழுத்துப் பிழையற என்ற பகுதி பற்றிய கருத்தையேயன்றி, பிள்ளையார் தோற்றத்தைப் பற்றியதல்ல. இருப்பினும் தங்கள் கருத்து, திருஞானசம்பந்தர் தேவாரத்துடன் ஒத்துள்ளது. இது பலருக்கும் பயன்படும். எழுதியமைக்கு நன்றி. - ஆசிரியர்)**

# டென்மார்க்கில்.. சைவத் தமிழ்ப் பெருவிழா..!

அனைவரையும் மகிழ்விக்கும் ஆன்மிக விழா..!!பக்தி மணம் கமழும் பண்பாட்டு திருவிழா..!

தாய்மண்ணில் வாழமுடியாத சூழ்நிலையால் சொந்த நாட்டை, வாழ்ந்த வீட்டை, கும்பிட்ட கோயிலை, படித்த பள்ளியை, பக்கத்து உறவுகளை எல்லாம். விட்டு, .பலமைல் தூரத்தில், குத்தும் குளிருக்குள், குதிமறைக்கும் பனிச் சேற்றுக்குள், வெந்த மனத்துடன் ஓடி ஓடி உழைத்து, உருக்குலையும் தமிழ் மக்களின் வேதனைக்குள். அவர்களின் உயிர்நாடியான கலாசார பண்பாட்டு நிகழ்ச்சிகளான சமய நடைமுறை நிகழ்வுகளை எப்படி நடத்துவது?! எவர்வந்து நடத்துவது? எவர்வந்து எமக்கு உதவி செய்வார்கள்? என்ற ஏக்கம் ஒருபக்கம் அவர்களை வாட்டி வதைக்கின்றது. இதைவிட இவர்களின் அடுத்த சந்ததியினர் இந்த மெய்ஞ்ஞானச் சிந்தனைகொண்ட கலாசார விழுமியங்களின் விளக்கமும். விவரமும் தெரியமுடியாது. தங்களின் சொந்த கலாசார விழுமியங்களைத் தெரியாமல் பாசம், பண்பு நேசம் போன்ற விடயங்களில், இடைவெளி கூடிவிடுமோ என்ற சிந்தனையில். இவைகளை ஓரளவாவது நிவர்த்தி செய்ய வேண்டும் என்ற பலரின் சிந்தனையில். உதயமாகி உருவாக்கப்பட்டதே இந்தச் சைவத் தமிழ்ப் பண்பாட்டு பேரவை, டென்மார்க்.

2008, தைமாதம் (15.01.2008) சனிக்கிழமை டென்மார்க்கில் பில்லுாண்ட் நகரசபை நூல் நிலைய மண்பத்தில் திரு பொன்னண்ணா தலைமையில் நடந்த பொதுச்சபைக் கூட்டத்தில் உருவாக்கப்பட்ட சைவத் தமிழ்ப் பண்பாட்டுப் பேரவையால். எதிர்வரும் 17-01-2009 சனிக்கிழமை டென்மார்க் பரடேசியா நகரசபை NØRRE ALLE SKOLEN பாடசாலை மண்டபத்தில் சைவத் தமிழ் பெருவிழா நடைபெற இருக்கின்றது.

மேற்படி பேரவையினரால் டென்மார்க் தழுவிய விதத்தில் நடாத்தப்பட்ட தேவார பண்ணிசைப் போட்டி 2008ஐ டென்மார்கில். மூன்று பிவுகளாக பிரித்து. சேலனில் பலறொப் என்ற இடத்திலும். யூலாண்டில் ஹேணிங் என்ற இடத்திலும். மூன்றாவது பிரிவாக பியுனில் பரடேசியாவிலும் நடத்தினர். போட்டியில் கீழ்ப்பிரிவு, மத்திய பிரிவு, மேற்பிரிவு., அதிமேற்பிரிவு என நான்கு பிரிவுகளாக நடாத்தப்பட்டது. போட்டியில் நாடுதழுவிய ரீதியல் 89 போட்டியாளர்கள் கலந்து கொண்டனர். போட்டியாளரிடையே ஒவ்வொரு பிரிவுக்கும் ஒவ்வொரு பிரதேசத்திலும் முறையே மூவரைத் தெரிவு செய்து இறுதிச் சுற்றுக்காக 10.01.2009 ல் பரடேசியாவில் இறுதிச் சுற்றுத் தெரிவு நடைபெற்றது. அதில் அன்றே அதிமேற்பிரிவினரிலும் இறுதிச்சுற்றுக்கு சிலர் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

இந்தத் தெரிவுகளுக்கு முறையே இசைக்கலைமணி, இசைமாமணி குமுதினி பிரிதிவிராஸ் அவர்களும். இசைமாமணி தர்மவதி இராமச்சந்திரமூர்த்தி அவர்களும் இசைமாமணி கிருபாகரன் சிவபாதசுந்தரம் அவர்களும். சங்கீத வித்வான் காயத்தரி சண்முகம் அவர்களும். சங்கீத வித்துவான்கள் சிவஸ்ரீ மா. கணேசக் குருக்கள் அவர்களும் திருமதி நளினி சண்முகானந்தராஜா அவர்களும் கலந்து நடுவர்களாக அமர்ந்து முடிவுகளைத் தெரிவுசெய்தார்கள்.

போட்டியாளர்களை மகிழ்வித்து ஊக்குவிக்கும் எண்ணத்தில் பேரவையினர் முதல் நான்கு போட்டியாளருக்கும் தங்கப்பரிசும். மற்றையோருக்குத் தரமான பரிசுகளையும் வழங்குவதாக முடிவு செய்துள்ளனர். இதற்கு சைவத்தமிழ் பற்றுக்கொண்ட வர்த்தகர்கள் பரிசுகளை அன்பளிப்புச் செய்துள்ளார்கள். பங்குபற்றிய அனைத்து போட்டியார்களுக்கும் ஊக்கப்பரிசும் சான்றிதழும் விழாவில் வழங்குவதாகப் பேரவை முடிவுசெய்துள்ளது. விழாவுக்கு இலண்டன் சைவமுன்னேற்றச் சங்கத்தின் காப்பளரும், பொருளாளருமான திருவாளர் வ.இ. இராமநாதன் அவர்கள் கௌரவ விருந்தினராகக் கலந்து கொள்கின்றார்.

நாட்டிய நாடகங்களும். பரத நாட்டியங்களும் பத்திப்பாமாலை கொண்ட இசைக்கச்சேரியும் வேறும்பல இசை நிகழ்ச்சிகளும். விழாவில் அரங்கேற இருக்கிறது. பிரபல எழுத்தாளர் திரு .செல்லத்துரை சிறிஸ்கந்தராசா எம்..ஏ (கங்கைமகன்) அவர்கள், மேற்படி பேரவைக்கு "தமிழர் வாழ்வில் சைவ சமயம்" என்ற ஒரு நூலை எழுதி அன்பளிப்பு செய்துள்ளார். அந்த நூலும் சபையில் வெளியிடப்படும். இப்படிப் பல நிகழ்வுகள் இந்த விழாவில் நடக்க இருக்கின்றன.





கீழ்ப்பிரிவு மத்தியபிரிவு மேற்பிரிவு

டென்மார்க் சேலண்ட் பலறோப்பில் டென்மார்க் சைவத் தமிழ் பண்பாட்டுப் பேரவையினர் நடாத்திய 2008 தேவாரப் பண்ணிசைப் போட்டியில் மூன்று பிரிவிலும் தெரிவு செய்யப்பட்ட போட்டியாளர்கள்.





கீழ்ப்பிரிவு மத்தியபிரிவு மேற்பிரிவு

டென்மார்க் ஹேணிங்கில் சைவத்தமிழ் பண்பாட்டுப் பேரவையினர் நடாத்திய 2008 பண்ணோடு தேவாரம் பாடும் போட்டியில் கலந்து முதற் சுற்றில் ஒவ்வொரு பிரிவிலும் தெரிவான மாணவர்கள்.






கீழ்ப்பிரிவு மத்தியபிரிவு மேற்பிரிவு

டென்மார்க் சைவத் தமிழ் பண்பாட்டுப் பேரவையினரால் 29-11.2008 பரடேசியாவில் நடத்தப்பட்ட 2008 தேவாரப் பண்ணிசை போட்டியில் முதற் சுற்றில் மூன்றுபிரிவிலும் தெரிவானோர்.





நடுவர்களாகக் கலந்துகொண்ட இசைமாமணி திருமதி தர்மவதி இராமச்சந்திர மூர்த்தி திருவாளர் சங்கீதவித்துவான் சி கீருபாகரன் அவர்கள் சிவஸ்ரீ மா. கணேசக்குருக்கள் அவர்களுடன் பங்குபற்றிய ஏனைய மாணவர் சிலரும் கலந்து கொண்ட சபையோரும்.

# மனிதவாழ்வில் ஜோதிடம் மாபெரும் பொக்கிஷம்

துன்னையூர் கலாநிதி ராம். தேவலோகேஸ்வரக்குருக்கள்

## மிதுன லக்கினம்




மிதுன லக்கினம் லக்கின வரிசையில் மூன்றாவது லக்கினமாக அமைகின்றது. இந்த லக்கினத்துக்கு உரிய அதிபதி புதன். பொதுவாகவே கிரஹங்களில் வித்தை எனப்படும் கல்விக்கு அதிபதி புதன். அதிலே இந்த மிதுன லக்கினம் உடையவர்களுக்கு இன்னுமொரு சிறப்பு யாதெனில் சுகஸ்தான அதிபதி எனப்படும் நான்காம் பாவமும் புதனின் ஆதிபத்தியத்திலே அமைவதாகும். இதனால் மிதுன லக்னமுடையோர்க்கு கல்வியில் மிகவும் சிறப்பான யோகமான பலாபலன்கள் அமையக்கூடிய பலன் உண்டு. உயர்கல்வி, பட்டப்படிப்புகள், மேன்மை அமைகின்ற நிலையுண்டு. கிரஹநிலையில் புதன் நீசம் பெற்று அமைந்தால் சற்று கல்விக் குறைவு அமையலாமே தவிர மற்றைய நிலைகளிற் சிறப்பான கல்வியே அமையும் பலன் உண்டு. இந்த லக்னம் உடையவர்களுக்கு குருபகவான் களத்திர ஸ்தான அதிபதியாக அமைவது குடும்ப வாழ்க்கை மிகவும் சிறப்பானதாக அமையும் நிலையுண்டு. இந்த லக்கினம் உடையவர்கள் சிறந்த அறிவும் ஆற்றலும் உடையவர்களாக இருப்பார்கள். தங்களின் காரியங்களில் அதீதமான செயற்பாடு உள்ளவர்கள். தங்கள் விடயங்களைச் சாதிப்பதில் வல்லுநர்கள். கணிதத்துறை அறிஞர்கள், வழக்கறிஞர்கள் போன்ற பதவிகளில் இந்த லக்கினம் உடையவர்கள் அதிகம் இருப்பார்கள். இந்தலக்கினம் உடையவர்களுக்கு சுக்கிரன் மிகவும் யோககாரகனாக அமைகின்றார்

சரியான காலத்தில் இவர்களுக்கு சுக்கிர மஹாதிசை அமையுமாயின் மிகச் சிறந்த பலன்களைக் கொடுக்கும் நிலையுண்டு. தொழில் ஸ்தான அதிபதியாக குருபகவான் கொடுக்கும் நிலையுண்டு. தொழில் ஸ்தான அதிபதியாக குருபகவான் அமைவது தொழில் நிலைகளிலும் மேன்மையான உயர்பதவிகள் அமைகின்ற பலன் இந்த லக்கினம் உடையவர்களுக்கு உண்டு. வாக்குச் சாதுர்யத்தினால் எதையும் வெல்லக்கூடிய ஆற்றல் அதிகமாகக் கொண்ட மிதுனலக்ன அன்பர்களுக்கு அட்டமாதிபதியாக ஆயுட்காரகன் சனி அமைவது நீண்ட ஆயுள் நிலை இருக்கும். எந்த விடயம் என்றாலும் அதில் தன்னலம் கருதிச் செயற்படுகின்ற குணஇயல்பும் வாக்குஸ்தான அதிபதியாக சந்திரன் அமைவது பேச்சுக்களில் கபடத்தன்மையும் இருக்கும். இவர்களை நம்பி எந்தக்காரியத்தையும் துணிவாக செய்ய முடியாது. திடீர் என்று தங்களின் நிலையை மாற்றி விடுவார்கள். எனவே மற்றவர்களின் விடயங்களை விடத் தன்னுடைய விடயங்களிலேயே இவர்கள் அதிகமான அக்கறை உடையவர்கள். எப்பொழுதுமே அதிகமான சிந்தனை இவர்களிடம் இருக்கும். புதன், சுக்கிரன், சந்திரன், போன்ற கிரஹங்கள் ஆட்சி, உச்சம் பெற்று நல்ல ஸ்தான நிலையில் அமைந்தால் ராஜயோகம் அமைகின்ற பலன் இருக்கும். இவர்களின் அதிர்ஷ்ட ரத்தினக்கல் மரகதப்பச்சை.

இவர்களின் அதிர்ஷ்ட நிறம் பச்சை, விஷ்ணுவழிபாடு மிகவும் உகந்த பலாபன்களைக் கொடுக்கும். சுபக்கிர ஹங்களின் பார்வை அமைகின்ற நிலையில் 80 வருஷம் வாழும் நிலையுண்டு.

## கடகலக்னம்




கர்க்கடகம், அல்லது கடகம் எனப்படுகின்ற இந்த லக்னம் லக்ன வரிசையில் நான்காம் லக்னமாக அமைகின்றது. மாத்துருகாரகன் எனப்போற்றப்படுகின்ற சந்திரன் இந்த லக்கினத்தின் அதிபதியாக அமைகின்றார். கலகலப்பாக எல்லோருடனும் பழகும் குண இயல்பைக் கொண்டவர்கள் இவர்கள். வாக்குஸ்தான அதிபதியாக சூரியன் அமை வதால் சுடுசொல் பேசுகின்ற குணம் இருக்கும். சுகஸ்தான அதிபதியாக சுக்கிரன் அமைவது வர்த்தகத்துறை சம்பந்தமான கல்விகளில் சிறப்பான மேன்மைகள் அமையும் பலன் உண்டு. பொதுவாகவே மனநிலையில் யோசனைகளும், சஞ்சலங்களும் அதிகமாக கொண்டவர்கள் இவர்கள். எந்த விடயமாக இருப்பினும் சற்று போராடியே ஜெயிக்கவேண்டியநிலை இவர்களுக்குண்டு. செவ்வாயும், குருவும், இவர்களுக்கு யோகாதிபதியாக அமைகின்றனர். அந்த வகையில் இக்கிரஹங்களின் மஹாதெசை அமையும் காலங்களில் சிறப்பான யோகமும், மேன்மையும் அமையும் பலன்கள் உண்டு. மற்றவர்களின் மனநிலை அறிந்து உதவிகள் புரியும் குணஇயல்பு இவர்களின் சிறப்பான அம்சமாகும். இவர்களின் களத்திர ஸ்தான அதிபதியாக சனீச்சரன் அமைவது குடும்ப வாழ்க்கை இவர்களின் எதிர் பார்ப்புகளுக்கு ஏற்ப அமைய வாய்ப்புக்கள் இல்லை. ஏதேனும் ஒரு வகையில் சிறு குறை குடும்ப வாழ்விலே இருக்கும். வளர்பிறை, தேய்பிறை, சந்திரனின் நிலைபோலவே வாழ்வில் அடிக்கடி வெற்றி தோல்விகளை எதிர்கொள்ளும் நிலைகள் இவர்களுக்குண்டு. தங்களின் காரியம் சாதிக்க மிகுந்த சிரத்தையோடு செயற்படும் குணம் அதிகம் உண்டு. மற்றவர்களின் அறிவுரை கேட்பதில் பெரியநாட்டம் இருக்காது. தமது முடிவே சரியானது என்கின்ற நிலையில் முடிவுகளை எடுத்து பின்னர் அதற்காக வருத்தப்படுகின்ற நிலை உள்ளவர்கள். தங்களுடைய பிரசினை இயலாமை, என்பனவற்றைப் பெரிதாக மற்றவர்களுக்கு காட்டிக்கொள்ள மாட்டார்கள். இவர்களுக்கு கிரஹநிலையில் செவ்வாயும், குருவும் ஆட்சி, உச்ச நிலையில் கேந்திர ஸ்தானங்களில் அல்லது குரு, செவ்வாய் சேர்க்கை நிலை போன்ற தன்மையில் அமையப்பெறின் மிகவும் சிறப்பான யோகங்களையும், சமூகஅந்தஸ்தையும் கொடுக்கும் நிலையுண்டு. தொழில் ஸ்தான அதிபதியாக செவ்வாய் அமையப் பெறுவதும் சிறப்பான அம்சமாகும். இவர்களுக்கு உரிய அதிர்ஷ்ட ரத்தினக்கல் முத்து. அதிர்ஷ்ட நிறம் வெண்மை நிறம். இவர்களின் லக்னத்திற்கு அம்பாள் வழிபாடு மிகவும் அநுகூலமானதாக அமையும். சுபக்கிரஹங்களின் பார்வை பெறும் நிலையில் 90 வருடம் வாழும் நிலையுண்டு.

### பங்குனி மாதமும் சூரியனும்

பங்குனியில் சூரியன் ஒளி கோயிலில் உள்ள சிவலிங்கத்திலே குறிப்பிட்ட தினங்களில் விழுவதுபோலக் கோயில்கள் தமிழ்நாட்டில் அமைந்துள்ளன.

திங்களூர் - கயிலாசநாதர் கோயில்
திருப்பரிதி நியமம் - பரிதியப்பர் கோயில்
தாரமங்கலம் - கயிலாசநாதர் கோயில்
திருவேதிகுடி - வேதபுரீஸ்வரர் கோயில்
திருப்பட்டூர் - பிரம்மபுரீஸ்வரர் கோயில்


CARLTON LEISURE
Worldwide Travel & Tours
IATA
BOOK ONLINE @ WWW.CARLTONLEISURE.COM
ஆத்தவிட்டு பறக்கிறிங்களோ
குளத்தவிட்டு பறக்கிறிங்களோ
பறக்கிறதென்டு முடிவெடுதிட்டா
CARLTON LEISUREவுடன்
பேசிவிட்டு பறவுங்கள்
MAIN AGENT FOR
SriLankan
KUWAIT AIRWAYS
ETIHAD
Emirates
ROYAL JORDANIAN
QATAR AIRWAYS
malaysia
AIR INDIA
AirEuropa.com
Alitalia
AIR MAURITIUS
IBERIA
Avianca
AIR CHINA
CHINA EASTERN
brussels airlines
JET AIRWAYS
SOUTH AFRICAN AIRWAYS
CHINA AIRLINES
SAUDI ARABIAN AIRLINES
TAM
TAP PORTUGAL
EVA AIR
CZECH AIRLINES
Vietnam Airlines
Nationwide Airlines
LAN
AEROLINEAS ARGENTINAS
SPECIALIST IN
TOUR PACKAGES TO
ALL WORLDWIDE DESTINATION
Tour Hotline
020 8429 2797
tours@carltonleisure.com
EMERGENCY TRAVEL 07957 450 895
NEWBURY PARK
742 EASTERN AVENUE
ILFORD, ESSEX, IG2 7HU
020 8554 4200
EAST LONDON
7 STATION PARADE
EAST HAM, LONDON, E6 1JD
020 8586 7675
SOUTH LONDON
233 MITCHAM ROAD
TOOTING, LONDON, SW17 9JG
020 8672 5757
CENTRAL LONDON
68 GREAT PORTLAND ST.
LONDON, W1W 7NG
020 7636 7636
WEST LONDON
299 RAYNERS LANE
HARROW, MIDDX, HA5 5EG
020 8426 1266


KS
KENTON SOUND
Sound,Dj & lighting
Over
16Years
Experience
In the
UK
Sound Equipment,
Lighting Systems,
Radio Mics and
Pyrotechnics
for Hire
பிரபல இந்தியப் பாடகர் S.P. பாலசுப்பிரமணியத்தின்
பாராட்டைப் பெற்ற நிறுவனம்
All our electrical equipments
are PAT tested
Public Liability Insured
Call Balan
020 89077588
07976922136

# இன்குரல் இசையிற் பண்ணிசை

## பண்ணிசைப் பாமாலை



விமரிசனம் - ஹிந்தோளம்

ஐயடிகள் காடவர்கோன் அறுபத்துமூன்று நாயன்மார்களுள் ஒருவர். அரசராக இருந்தவர். பல்லவர் குலத்தவர். பின் அரசு உரிமையும் அரசரின் கடமையும் சிவத்தொண்டு செய்வதைப் பாதிக்கும் என்று உணர்ந்தவர். அதனால் அரசைத் துறந்து ஆலயங்களை வழிபட்டு அருட்பாடல்கள் பாடியவர். இவரின் அருட்பாடல்கள் பதினொராந் திருமுறையில் உள்ளன. க்ஷேத்திர திருவெண்பாக்கள் அவை. அவற்றில் ஒன்றில், நூற்றுக்கணக்கான ஊழிக்காலம் செல்வச் செழிப்புடன் அரசாளும் இன்பத்தை விட பாம்பை இடுப்பிலே கட்டிய சிவபெருமானின் பாடல்களை ஒரேயொரு நாள் கேட்கும் இன்பம் பெரியது என்று பாடுகிறார் அவர்.

நூற்றனைத்தோர் பல்லூழி நுண்வைர வெண்குடைக்கீழ்
வீற்றிருந்த செல்வம் விளையாதே - கூற்றுதைத்தான்
ஆடரவங் கச்சா அரைக்கசைத்த அம்மான்தன்
பாடரவங் கேட்ட பகல்

நமக்கும் அந்த இன்பத்தினை நல்கவென வந்துள்ள இசைக் குறுந்தட்டுத்தான் திருமதி மாதினி சிறிஸ்கந்தராசா அவர்கள் பாடி வெளியிட்டுள்ள பண்ணிசைப் பாமாலை. கடந்த 2008ஆம் வருடம் அப்டோபர் மாதம் 12ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை செல்வவிநாயகர் ஆலய மண்டபத்தில் இந்த இசைத்தட்டு வெளியானது. இசை அறிஞர்களும் இலக்கிய ஆர்வலர்களும் சமயத் தொண்டர்களும் கூடிய சபையில் விமரிசனங்களோடு வெளியீடு நடந்தது.

பாமாலை என்பதற்கு இணங்க, தொடங்கிய இடத்திலேயே முடிவதுபோல, சுத்தசாவேரி இராகத்திலே 'நாளாய போகாமே' என்ற திருஞானசம்பந்தர் தேவாரத்துடன் தொடங்கி சுத்தசாவேரியில் 'அகரமுமாகி' என்ற திருப்புகழுடன் முடிவது இந்த இசைத்தட்டிலே குறிப்பிடக்கூடிய ஓர் அம்சம்.

திருமதி மாதினி அவர்களின் இனிமையான குரல் வளம் உள்ளத்தை உருக்கும் திருமுறைகளுக்கு மேலும் மெருகூட்டும் வகையில் அமைந்துள்ளது. வழமையாக அடிக்கடி கோயில்களிலே கேட்கும் சொற்றுணை வேதியன், பொன்னார் மேனியனே என்ற தேவாரங்களிலிருந்து விலகி அடிக்கடி கேட்கமுடியாத ஆனால் அதேபோல அருட்சுவை நிறைந்த தேவார திருமுறைப் பாடல்களைத் தெரிவு செய்திருப்பது இப் பாமாலையில்

இன்னொரு சிறப்பான அம்சம். தமிழ் இசையில் திருஞானசம்பந்தர் தேவாரங்கள் தனித்துவமானவை; சொற்சுவை பொருட்சுவை நிறைந்தவை. அதனாற்போலும், இந்த இசைத்தட்டில் உள்ள பதினான்கு திருப்பாடல்களில் ஆறு திருப்பாட்டுக்களை சம்பந்தருடன் சம்பந்தப்படுத்தியுள்ளார் திருமதி மாதினி அவர்கள்.

"இன்குரல் இசைகெழும்" என்ற வியாழக்குறிஞ்சிப் பண்ணில் அமைந்த சிவபுரத் தேவாரமும் "கல்லூர்ப் பெருமணம்" என்ற அந்தாளிக்குறிஞ்சி பண்ணில் அமைந்த திருநல்லூர்ப்பெருமணத் தேவாரமும் நம் பாவங்களை அறுத்து அவலம் அற்றவர் ஆக்கும் வகையில் அமைந்துள்ளன. பண்களின் மரபுவழி நின்று சிறிதும் இசைநயத்துக்காகப் பிறழாமல் மாதினி அவர்கள் பாடியுள்ளார்கள். திருக்குறுந்தொகையில் இந்தக் கட்டுப்பாடு இல்லை என்பதால் "நமச்சிவாயவே ஞானமுங் கல்வியும்" கல்யாணி இராகத்தில் அருட்பாவத்துடன் அழகாக வந்து அமைந்துள்ளது.

'வழங்குகின்றாய்க்கு' என்ற திருவாசகம் மோகனத்தில் மோகனமாக ஒலிக்க மத்தியமாவதியிலே 'மங்கையர்க்குத் தனியரசி' என்ற பெரியபுராணம் இசைச் சுவையோடு இலக்கியச் சுவையையும் அளிக்கிறது. 'மங்கையர்க்கரசி' என்ற தேவாரத்தை, சேக்கிழார் பெருமான் இன்னொரு வடிவில் வார்த்துக் கொடுத்துள்ள சுவையை வார்த்தைகளில் வடிக்கமுடியாது. இசைத்தட்டிலே கேட்டுத்தான் அநுபவிக்க வேண்டும். தர்மவதி இராகத்தில் 'கண்களிக்கும்படி' என்ற அபிராமி அந்தாதிப் பாடலில் "வீணையும் கையும் பயோதரமும்" எனவரும் இடத்தில், குரலிசையில் வரும் இடைவெளியில் வீணை இசை தவழ்ந்து வந்து தனியிடத்தைப் பிடித்துக்கொண்டது. 'கலையாத கல்வியும்' என்ற பாடல் அபிராமி பதிகத்திலுள்ளது. ஆனால் அபிராமி அந்தாதி என்று தவறாக அச்சில் பதிவாகி உள்ளது. திருவாசகம் திருமுறை வரிசையில், திருவிசைப்பா, திருப்பல்லாண்டு ஆகியவற்றுக்கு முன் பாடவேண்டியது. இங்கே அவற்றின் பின் வருகிறது. இந்த இரண்டைத் தவிர இசைத்தட்டிலே 'குறையொன்றுமில்லை'.

'அகரமும் ஆகி' என்ற திருப்புகழை முன்பு நாலு இராகங்களில் இராகமாலிகையாகப் பாடக் கேட்டிருக்கிறேன். முதன்முதலாக லூயிஷாம் சிவன்கோயில் ஓதுவார் திரு சாமி தண்டபாணி அவர்கள் சுத்தசாவேரியில் பாடியதைக் கேட்டேன். மிக அற்புதமான மெட்டு. மாதினி அவர்களும் அதே மெட்டிலே பாடியிருப்பது அந்தச் சுவையை அசைபோட வைத்தது. இந்த இசைத்தட்டைக் கேட்கும்போது நமது கண்களில் ஆனந்தக்கண்ணீர் பெருகுகிறது. திருமதி மாதினி அவர்கள் செய்துள்ள ஒரு தொண்டு இது என்றே சொல்லவேண்டும்.

"செய்வன திருந்தச் செய்" என்பது பழமொழி. அதற்கேற்ப மாதினி அவர்கள் மிகுந்த அக்கறை எடுத்து பாடல்களைத் தெரிந்து உரியவர்களிடம் ஆலோசனை கேட்டு (இசைத்தட்டு விவரத்தில் உதவியோர் விவரமும் உள்ளது) இசை நயத்தோடும் பத்திச் சுவையோடும் பாடி, பலரும் பயனுறவேண்டும் என்ற எண்ணத்தில் இதை வெளியிட்டுள்ளார்கள். இந்த இசைத்தட்டை எங்கேயும் எப்பொழுதும் கேட்கலாம். மந்திரங்களைப்போல மனதிலே சொல்வது என்ற விதி இதற்கு இல்லை. வீட்டிலும் வாகனங்களிலே பயணிக்கும்போதும் கேட்டு மகிழ ஏற்றது. அப்படிக் கேட்கும்போது இறைசிந்தனை நமக்கு வரும். நம்மை அறியாமலே நமக்கு இந்தத் திருமுறைப் பாடல்கள் மனதிலே பதிந்துவிடும். அந்தப் பேரானந்தத்தை நாம் அநுபவிப்பதோடு நமது பிள்ளைகளுக்கும் அந்த அநுபவத்தை வழங்கலாமே!


சமயகுரவர் நால்வர்


ஆரம்ப வழிபாடு


31 பெண்கள் மங்கள விளக்கேற்றல்


பண்ணிசை


சபையோர்


வந்த சிவாசாரியர்கள்



சபையோர்


திரு. சிவசுந்தரம் கலசம் முதற் பிரதி பெறுதல்.



குருக்களைக் கௌரவித்தல்



"வசந்தன்" குருக்களும் மனைவியும்

# சைவ முன்னேற்றச் சங்கம் (UK)
# 31வது ஆண்டு நிறைவு விழா
# 18-10-2008

சிவஸ்ரீ பால சர்வேஸ்வரக்குருக்கள் (வசந்தன் குருக்கள்) கௌரவிப்பும், கலசம் 60 ஆவது இதழ் வெளியீடும்.



பிரதம அதிதி தலைவருடன்





கலை நிகழ்ச்சி வழங்கும் நால்வர் கலை நிலைய மாணவர்கள்



தலைவர் உரை



பிரதம அதிதி உரை

# இலங்கையர்கோன் - சில நினைவுகள்

சி முருகவேள்
யாழ் பல்கலைக்கழக முன்னைநாள் நூலகர்.

சுமாரான உயரம், பொதுநிறம், சாதாரணமாக உத்தியோக நிமித்தம் வெளியே புறப்பட்டால் கால் அங்கியும் அற்கு ஏற்ற மேல் அங்கியும் அணிந்திருப்பார் - பிறத்தியான் உடை என்ற உள்ளுணர்வுடன். சில வேளைகளில் வேஷ்டியும் தேசிய அங்கியும் அணிந்து அரையில் ஓர் ஐந்துமுழச் சால்வையை இறுக்கிக் கட்டியிருப்பார். ஒன்றிலும் நிலைகொள்ளாத கண்கள், சமகால உலகத்தைப்பற்றிய ஓர் உதாசீனம், சினம் பிரதிபலிக்கும். கீழ் உதடை மேல்வரிசைப் பற்களால் கடித்து ஒரு சிரிப்பு உதிர்ப்பார் - இடையிடையே. இது அவரது, இலங்கை யர்கோன் என அறியப்படுகின்ற, திரு ந. சிவஞானசுந்தரம் அவர்களின் பௌதிக ஆளுமை, ஓரளவு உட்பார்வையையும் புலப்படுத்தும்.

இலங்கையர்கோனுக்கு என் தந்தை., அண்ணர், ஒன்றுவிட்ட அண்ணர். எனக்கு இவர் சிறியதந்தை "குஞ்சியப்பு" இவர் சரிதைபற்றி எனது நினைவில் இருக்கின்ற சில அகலாத பதிவுகளைச் சொல்கிறேன்; சுவையாக இருக்கும் என்று நம்புகிறேன்.

எனக்கு அப்பொழுது பதினான்கு - பதினைந்து வயதிருக்கும். தின்னவேலியில் பரமேசுவரக் கல்லூரியிலிருந்து, "பாரசீயப் பண்பாடும் யாழ்ப்பாணக் கலாசாரமும்" கலந்த செம்பாட்டுக் கல்லூரியிலிருந்து 6மணி, மாலை நேரத்தில் வந்து ஊர் கிரிக்கெட் மைதானத்துக்குப் போகிற ஒழுங்கையில் ஒரு முடக்கில் ஒரு நீலத் தகரப் படலையின் முன் சில சந்தர்ப்பங்களில் ஒரு பேஜோ 203கார் நிற்கும். படலையைத் திறந்து போனால், திண்ணையில் ஒரு தாழ்ந்த கதிரையில், இலங்கையர்கோன் கால்மேற் கால் போட்டுக்கொண்டு இருப்பார். அருகில், கீழே, ஒரு பெண்மணி, ஒரு மூதாட்டி வெற்றிலைத் தட்டத்துடன் இருப்பார். உரையாடலில் கொண்டோடிச் சின்னாச்சியைப் பற்றி, தோட்டக்காரி ஊமைச்சியைப்பற்றி, மாலை நேரங்களில் ஒழுங்கையில் புராணபடனம் செய்யும் குடிகாரச் சுப்பையா பற்றி, இன்னும் பற்றபல ஊர் விவகாரங்கள் பற்றி செய்திகள் அலைபுரண்டோடும்.

பரமேசுவரக்கல்லூரியின் இராமநாதன் மண்டபத்தில் இலங்கை வானொலிக்காக தனது நாடகத்தினை நாடாவிலே பதிவுசெய்த இலங்கையர்கோனும் எனது நினைவில் நிற்கிறார்.

தேசிய உடையில் அரையில் இறுகக்கட்டிய சால்வையுடன் நாடகத்தை இயக்கிக் கொண்டிருந்தார். நாடகத்தின் இடையில் ஒரு பாட்டு. வந்திருந்த பாடகியின் பாட்டு அவருக்குத் திருப்தியில்லை. இடையிற் காரை எடுத்துக்கொண்டு புறப்பட்டவர் நள்ளிரவு 11மணிக்கு அக்காலத்தில் பிரபலமான ஒரு பாடகியைக் கூட்டிக்கொண்டு வந்திருந்தார். பாடல் பதிவுசெய்து நிகழ்ச்சி முடிய இரவு ஒரு மணி!

இன்னும் இரண்டொரு நிகழ்வுகள்: கொழும்பில் தேர்ஸ்டன் பாதையில், இலங்கை பல்கலைக் கழகத்தில் தமிழ், சமஸ்கிருதம், பாரதிய வரலாறு முதலிய "பயனற்ற" பாடங்களைப் பயின்றுகொண்டிருந்த காலம் அது. ஆனந்தகுமாரசாமி மாவத்தையில் - அது அப்பொழுது "கிறீன்" பாதை, "லிபேர்டி" சந்திக்கருகில் ஒரு குச்சொழுங்கை; அங்கு ஒரு சிறு வீடு. அவ்வீடு ஏழாலையில் இருந்து வந்து போகிறவர்களுக்கு ஒரு சத்திரம் போல. இவ்வீட்டிலிருந்துதான் நான் கழகத்துக்குப் போய்வருவேன். ஒருநாள் மாலை பேர்ஜோ 203 வந்து நின்றது. இலங்கையர்கோன் இறங்கிவந்து இரண்டொருநாள் ஜாகை போட்டிருந்தார். மறுநாட் காலை, "டேய் முருகவேள்! வாவன் உன்னை இறக்கிவிட்டுப்

போறன்" என்றார். காரை எடுக்கமுன் கையைக் காற்சட்டைப் பையுள் விட்டுத் துழாவி எடுத்தார். கார் சாவியுடன் கத்தை நோட்டுக்கள். "என்ன காசு நல்லாக உலாவுதுபோல" என்றேன். "கொஞ்சம் காசு கிடைத்தது. சும்மா றேசிலை எறிந்துவிட்டுப் போக வந்தனான்" என்றார். 'எறிந்து' என்ற சொல்லில் ஒரு அழுத்தம்.

கொளும்பில் அதே வீட்டில் - ஒட்டுசுட்டானுக்கு என்று நினைக்கிறேன் - புறப்படமுன்னர் என்னோடு உரையாடினார். உலக இலக்கியங்களையெல்லாம் அலசினார். எனக்கு அது ஒரு விரிவுரையாக இருந்தது. 203இல் ஏறமுன்னர். எனக்கொரு புத்தகம் ஞாபகத்திற்காகத் தந்தார். அது திருஞானசம்பந்த சுவாமிகள் தேவாரம். சமாஜப்பதிப்பு. தந்தபொழுது அவர் கூறியது, "இதைப் படியடா. தமிழ்ப்பாஷை ஆற்றலின் உச்ச வரம்பை அறியவேண்டுமென்றால் இதனைப் படிக்கவேண்டும்". புத்தகத்தின் முதற்பக்கத்தில் ந. சிவஞானசுந்தரம் என்று எழுதப்பட்டிருந்தது. புத்தகத்தை நான் பல ஆண்டுகளாக வைத்திருந்தேன். அது மாயமாக மறைந்துவிட்டது. நல்ல புத்தகங்கள் மறைவது அவற்றுக்கே உள்ள தனிப்பண்பு. எனது பல புத்தகங்கள் பேராசிரியர்களுக்கும் விரிவுரை யாளர்களுக்கும் கொடுத்தவை அவ்வாறு 'மாயமாய்' மறைந்துள்ளன.

தமிழிலக்கியத்தின் அகல ஆழங்களைக் கண்டவர் இலங்கையர்கோன். அத்துடன் உலகப் பேரிலக்கியங்களில், சிறப்பாக வடமொழி இலக்கியங்களில் நல்ல பரிசயம் உடையவர். ஆனால், தமிழ்ப்பாஷையின் மூலமாகத்தான், மீண்டும் சொல்கிறேன், மூலமாகத்தான் தனது உள்ளம் சுருள் விரிந்து மலரும், மலரமுடியும் என்பதனை நன்கு உணர்ந்திருந்தார். அதனாலேதான் அவர் தமிழில் எழுதினார். இக்காலத்து எழுத்தாளர் போல் வெறும் சூனியத்தில் இருந்து அவர் எழுதவில்லை. உலகப் பேரிலியக்கியங்களில் பரிசயம் உடையவராக இருந்ததனாலேதான் அவருக்குத் தரம் அறிந்து எழுத முடிந்தது. இன்னுமொன்று. அர்த்தமற்ற சாதி முரண்பாடு, வர்க்க முரண்பாடு, பழசாய்ப்போன அரசியல் சித்தாந்தங்கள், பாஷை அபிமானம், இனத்துவேஷம் முதலிய குறுகிய வட்டத்தில் நின்று என்றுமே அவர் வாழ்வினைப் பார்த்ததில்லை; எழுதவுமில்லை.

இனி, வெள்ளிப் பாதரசத் தொகுதியி னைப்பற்றி சில வார்த்தைகள். எனக்குப் பிடித்த கதைகளில் இரண்டினைக் குறிப்பிடுகிறேன். ஒன்று சக்கரவாகம், மற்றது மச்சாள்.

சக்கரவாகம் புதுமைப்பித்தனின் நினைவுப் பாதையினை நினைவூட்டுகிறது. ஒரு சாதாரண குடியானவரது குடும்ப வாழ்வில் இழையோடும் அன்பினை, காதலை கோடிட்டுக் காட்டுகிறது. கற்பில் காதல் அன்பு. மச்சாள் அடைக்கும் தாளை உடைத்துக் கொண்டு ஊற்றெடுத்துப் பாயும் கண்ணீர்ப் பொழிவு. இது களவில் காதல்.

இத்தகைய கதைகளை எழுதுகிறபோது இலங்கையர்கோன்
"மலரினும் மெல்லிது காமம் சிலரதன்
செவ்வி தலைப்படு வார்"
என்ற குறட்பாவை உட்கொண்டு எழுதினாரோ? யாரறிவார்.


இலங்கையர்கோன் இத் தொகுதியில் உள்ள கதைகளையன்றி இன்னும் சில கதைகளை கலைமகள், ஈழகேசரி முதலிய பருவ இதழ்களில் எழுதியிருப்பார். சுந்தரர் சங்கிலிப் பிணைப்பை ஆதாரமாகக் கொண்டு சேக்கிழாரின் திவ்விய பொக்கிஷத்திலிருந்து நழுவி விழுந்த "சங்கிலி" என்ற தலைப்பைக்கொண்டு ஒரு கதை எழுதியுள்ளார் என்பது நான் அண்மையில் அறிந்த செய்தி. அனைத்தையும் இன்னும் அவருடைய ஆக்கங்களையும் சேர்த்து ஒரு பெரிய தொகுதியாக வெளியிடுவது ஸ்ரீஜெயவர்மனுக்கு -"மகன் தந்தைக்காற்றும் உதவி".





"சைவ சமயக் கருத்தினூடு சமூகசேவை"
செய்யும் சங்கத்தின் அடுத்த தலைமுறையினர்











சங்கத்தின் இளந் தொண்டர்கள் இலண்டன் அம்புலன்ஸ் சேவையிடம் முதலுதவிப் பயிற்சி பெறுகிறார்கள்.



## கோயிலும் படப்பிடிப்பும்....

**சில ஆலயங்களில் மூலவர் அபிஷேகம், ஆராதனை ஆகியவற்றைப் படம்பிடித்து ஒளிபரப்புகிறார்களே.... இது எந்த அடிப்படையில் அநுமதிக்கப்படுகிறது?**

கோயிலில் நடக்கும் விசேஷங்களைப் பலபேருக்குத் தெரிவிக்க படம் எடுத்து ஒளிபரப்புவது என்பது சமீபகாலத்தில் ஏற்பட்டிருக்கும் ஒரு வழக்கம். கோயிலுக்கு வரமுடியாதவர்களும் பார்ப்பதற்காகத்தான் உற்சவரை அவரவர் இடங்களுக்கே எடுத்துச் சென்று காட்டுகிறார்கள். "இதைப் பலரும் பார்த்தால் கோயிலுக்கு அதிகம் பேர் வருவார்களே" என்கின்ற பிரசார நோக்கத்தில்தான் மூலவரைப் படம் பிடித்துக்காட்டும் வழக்கம் உருவானது.

சாஸ்திரக் கண்ணோட்டமே வேறு. சாஸ்திரப்படி கோயிலில் வியாபாரம் என்கிற விஷயமே வராது. படம் பிடித்துக் காட்டுவது வியாபாரத்தோடு சேர்ந்தது. வெளித் தோற்றத்தில் வியாபாரம் தெரியாவிட்டாலும் உண்மை அதுதான்.

மற்றபடி, கோயிலைப் பெரிதாக்குவதற்காகத்தான் இப்படிச் செய்கிறோம் என்பார்கள். கோயிலைப் பெரிதாக்க நாம் பிரசாரம் செய்யத் தேவையேயில்லை. முறைப்படி செய்ய வேண்டிய பூஜை, புனஸ்காரங்களைச் செய்துவந்தாலே கோயில் பெரிதாகும். காசிக்குப் பிரசாரம் தேவையில்லை. எல்லோரும் போவார்கள். இராமேஸ்வரத்துக்கு பிரசாரம் வேண்டாம் அவரவரே போவார்கள். படம் பிடிப்பது என்பது நம் கோணல் மாணல் சிந்தனையில் தோன்றியது. பழைய சிந்தனையை மீறி வியாபாரத்தைப் புகுத்தி இருக்கிறோம்.

- சேஷாத்திரிநாத சாஸ்திரிகள் நன்றி: சக்தி விகடன்

அடுத்த இதழில்:...........

இலங்கையர்கோன் எழுதிய சேக்கிழாரின் தெய்வப்பொக்கிஷத்திலிருந்து

'நழுவி விழுந்த சங்கிலி' - சிறுகதை

சாவகச்சேரியூர் டாக்டர் க. கதிர்காமாதனின் **'முத்தித்தலங்கள்'** பயணக்கட்டுரை

**If you would like your Kalasam to be sent to your home address, please fill in the form below and send it to us with your payment.**

# கலசம்
# KALASAM

இலவச காலாண்டிதழ்

## கலசம் உங்கள் வீடுதேடி வரவேண்டுமா?

இப்படிவத்தை நிரப்பி அனுப்புங்கள்!

பெயர் :......................................................................................

முகவரி :......................................................................................

......................................................................................

......................................................................................

......................................................................................

Donation: £..................

Postage: £..................

Total £.

Kalasam
2 Salisbury Road
Manor Park
London E12 6AB

kalasam@hotmail.com

Postage and admin : £10 (U.K/Europe) : £ 20 (Rest of the world) (இரு வருடங்களுக்கு)

# சிவமூர்த்தங்கள்

திரு ச. வேதநாராயணன்

இறைவனைப் பற்றிக் கூறுகையில் அவனை எப்படி வர்ணிப்பது என்றே சொல்கிறார்கள். 'இப்படியன் இந்நிறத்தன் இவ்வண்ணத்தன் இவனிறைவன் என்று எழுதிக் காட்டொணாத'வன் என்று போற்றுகிறார்கள். மேலும் அவனை சோதி வடிவானவன் என்று சொல்வது மரபு. ஓங்கார வடிவானவன் என்றும் கூறுவர். 'மூவரும் அறிகிலர் யாவர் மற்றறிவார்' எனச் சாற்றுகிறது திருவாசகம்.

'நின்னளந்து அறிதல் மன்னுயிர்க்கு அருமையின்' (திருமுருகாற்றுப்படை), 'உருவாய் அருவாய் உளதாய் இலதாய்' (கந்தர் அனுபூதி) 'அருவமும் உருவுமாகி அநாதியாய்ப் பலவாய் ஒன்றாய் பிரம்மமாய் நின்ற சோதிப் பிழம்பு' (கந்தபுராணம்) 'அருட்சோதி தெய்வம் எனை ஆண்டுகொண்ட தெய்வம்' (திரு அருட்பா) 'சோதியே சுடரே சூழொளி விளக்கே' (திருவாசகம்) 'ஓங்காரமாய் நின்ற மெய்யா', 'ப்ரணவ ஸ்வரூப வக்ரதுண்டம்', ஓமெழுத்தில் அன்பு மிகவூறி ஆகியவற்றையும் நினைவு கூர்க.

சைவ சித்தாந்த மரபுப்படி இறைவன் மூன்று நிலைகளில் இருக்கிறான். அருவ (உருவமற்ற) நிலையில் இருக்கிறான். யோகிகள் தம் மனத்து இருத்தி அவனை உள்ளுகிறார்கள். இறைவன் யாவரும் காணும் உருவ நிலையில் உள்ளான். இதற்கு இடையில் உள்ள அருவுருவமாகவும் உள்ளான். இந்நிலையை லிங்கவடிவமாகத் தொழுகிறோம்.

இறைவன் அடியார்களுக்கு அருள் செய்யும்போது (அறக்கருணை.மறக்கருணை இரண்டிலும்) உருவமாகவே இருக்கிறான். தென்னவனாக சனகாதி முனிவர்களுக்கு உபதேசிக்கிறான். தாருகாவன முனிவர்களின் கருவத்தை அடக்க பிட்சாடனராகப் புறப்படுகிறான். சண்டிகேசுவர அநுக்ரஹ மூர்த்தியாகப் பரிமளிக்கிறான். கைலாயத்தில் உமாமகேசுரனாகக் காட்சி அளிக்கிறான். ஊர்த்துவ தாண்டவம் ஆடி, காளியைத் தலைகுனிய வைக்கிறான். மாலும். அயனும் வெட்குமாறு லிங்கோத்பவனாக பேருருவம் எடுக்கிறான். உடுக்கையிலிருந்து ஓம் என்ற ஒலியை எழுப்பி. பஞ்ச கிருத்தியத்தை ஆனந்தக்கூத்தனாக நெறிப்படுத்துகிறான். மார்க்கண்டனைக் காப்பதற்கு காலசம்ஹாரனாக உருவெடுக்கிறான். உலகம் உய்ய சோமாஸ்கந்தனாக அருள் புரிகிறான். இறைவனை 'பேடலர் ஆணலார் பெண்ணும் அல்லதோர்' என்று சம்பந்தர் பைஞ்ஞீலி பதிகத்தில் பாடுகிறார். அவனே ஆண், அவனே பெண். இதைக் குறிக்கும் வகையில் அவன் உமையொரு பாகத்தன் (அர்த்தநாரீசுவரன்). மாலயனைத் தாங்கும் ஏகபாத மூர்த்தியும் அவனே. மன்மதனை எரிக்கும் கோலத்தில் காமதகனன் ஆவான். திரிபுரம் எரித்த விரிசடைக் கடவுளாகத் திரிபுராந்தகன் திகழ்கிறான். மலையான் மகள் அஞ்ச வேழம் உரித்த பெருமான் கஜசம்ஹாரர். சிவனார் மனம் குளிர உபதேச மந்திரம் செவி மேல் உரை பகரப்பட்டபோது சிஷ்யபாவனமூர்த்தி. இப்படி சிவமூர்த்தங்கள் அறுபத்து நான்கு. ஒவ்வோரு மூர்த்தத்துத் தோற்றத்துக்கும் ஒரு கதை, தத்துவம் உண்டு. இம்மூர்த்தங்களில் சிலவற்றை இங்கே பட, சிலை, விக்கிரக உருவங்களிலே கொடுக்கும் பேறு பெற்றுள்ளேன்.

(படங்கள் அடுத்த பக்கத்தில்)


அருவமூர்த்தி
ஜ்வரஹரேஸ்வரர்,லால்குடி


அருவுருவமூர்த்தி
பிருஹதீஸ்வரர்,தஞ்சாவூர்


அர்த்தநாரீஸ்வரர்


பிட்சாடனர்


சண்டேச அநுக்ரஹ மூர்த்தி
கங்கைகொண்டசோழபுரம்


பைரவர்


காலாந்தகர்


கஜசம்ஹாரர்


கட்வாங்கர், தவத்துறை


நடராஜர்


தட்சிணாமூர்த்தி
சீயாத்தமங்கை


கங்காளர்
செங்காட்டங்குடி


சோமாஸ்கந்தர்
திருமழபாடி


காமதகனர்
குறுக்கை


புஜங்கலலிதர்
செங்காட்டங்குடி


லிங்கோத்பவர்
நனிபள்ளி


வீணாதட்சிணாமுஹூர்த்தி
துடையூர்


ஏகபாதமுஹூர்த்தி
திருவொற்றியூர்


திரிபுராந்தகர்
திருவதிகை


விருஷபாரூடர்


கல்யாணசுந்தரர்
துடையூர்


சிஷ்யபாவனர்
சுவாமிமலை


பெயர் தெரியாத முஹூர்த்தி ( ! )
குறுக்கை


சரபேஸ்வரர்
திருபுவனம்

# நீற்றறை குளிர்ந்த அற்புதம்



தருமசேனர் என்று சிறப்புப் பெயர் பெற்று உயர் சமண குருவாயிருந்தும், உற்ற சூலைநோய், சமணர் கைக்கொள்ளும் மந்திர தந்திர மருத்துவங்களால் நீங்காமை கண்டு, அந்த நெறி பொய்யென்றும் உய்தி கொடுக்காதென்றும் உணர்ந்து, தமக்கையாரின் அறிவுறுத்தல் ஆசீர்வாதத்துடன் அவர் கொடுத்த திருநீற்றை அவர் சொன்னபடி ஐந்தெழுத்தோதி, அணிந்து மீண்டும் சைவராகி, இறைவரை வணங்கிப் பாடல்கள் பாடி விண்ணப்பித்து அதனால் சூலை நோய் நீங்கி சிவதொண்டு செய்து கொண்டிருக்கும் திருநாவுக்கரசு நாயனாரைச் சமண குருமாரின் தூண்டுதலால் அரசர் அமைச்சர்களை அனுப்பி அழைத்தார்.

**இடைக்காடு சயம்பு - இலண்டன்**

முதலில் மன்னர் முன் போக மறுத்த தொண்டர் அமைச்சர்கள் பணிந்து மிகவும் வருந்தி வேண்ட அவர்களுடன் அரண்மனை வாசலுக்குப் போனார். ஆங்கு அரசர் நாயனாரை நேரே விசாரிக்கவில்லை. காணவேயில்லை. சமணகுருமாரைக் கேட்டார். "மற்றிவனைச் செய்வது இனி சொல்லுமென". இந்த அரசர் மகேந்திர பல்லவர் சகல கலைகளும் துறைபோகக் கற்ற ஒருவர். இருந்தும் சமண குருமாரின் பசப்பு வார்த்தைகளில் மயங்கி அந்தக் காலத்தில் அவர்களைக் கேட்டே அரசு செலுத்தினார். அவ்வளவு வலிமை யாய்ச் சமணருடைய பரப்புரைகள் அந்த நாளில் பல அரசர்களையும் வசப்படுத்தியிருந்தன. அரசரின் கேள்விக்குப் பதிலாக சமணர் "அஞ்சாது, நீற்றறையிலிடப் புகன்றார்". இது மரண தண்டனை! சித்திர வதையுடன் சேர்ந்த மரணதண்டனை!! அரசர் அங்கீகரித்தார். நிறை ஞானியாகி நின்ற நாயனாரை நீற்றறையில், சுண்ணாம்பு சுடும் காளவாயில்-தள்ளிக் கதவையும் பூட்டிவிட்டார்கள். (சுண்ணாம்புக் கற்கள் சுட்டு நீறாக்குவதை நான் பலநாளும் நேரிற் பார்த்திருக்கிறேன். வெட்ட வெளியில் சுடும் காளவாயிலிருந்து நூறுயார் தொலைவில் நின்றுதான் பார்க்கலாம். அனலும் கரியமில வாயுவும் புகையும் முந்நூறு யார் தூரத்துக்கு மூன்று நாள்களுக்கு மூடி நிற்கும்). நாயனார் "ஈண்டுவரும் வினைகளுக்கு எம்பிரானுளனென்று இசைந்திருந்தார்."

ஆண்டவரசு அதனகத்துள் அணைந்தபொழுது அம்பலத்துத்
தாண்டவமுன் புரிந்தருளுந் தாள்நிழலைத் தலைக்கொண்டே
"ஈண்டுவருந் துயருளவோ ஈசனடி யார்க்" கென்று
மூண்ட மனம் நேர்நோக்கி முதல்வனையே தொழுதிருந்தார்.

நாயனார் நீற்றறையின் வெப்பத்தை உணர்ந்தார். நிழல் தேடினார். இறைவருடைய தூக்கிய பாதத்தைவிட வேறு நிழல் உண்டா? அந்த நிழலாகிய அருளுக்குள் அடைக்கலம் புகுந்து அடங்கி இருந்தார். "மாசில் வீணையும்" என்று தொடங்கும் திருப்பதிகம் பாடினார். மனம் அடங்கி ஒரே நோக்காக இறைவரையே சரணடைந்து ஒன்றி இருந்தால் துன்பமில்லை.

மாசில் வீணையும் மாலை மதியமும்
வீசு தென்றலும் வீங்கிள வேனிலும்
மூசு வண்டறை பொய்கையும் போன்றதே
ஈசன் எந்தை இணையடி நீழலே.

இரண்டாவது பாடலில் திருவைந்தெழுத்தை ஓதியும் நினைந்தும் இருந்த சான்றுளது. திருவைந்தெழுத்தின் வலிமையையும் முத்திப் பயனையும் விளக்கினார். குருசீட முறையில் தமக்கையாரிடம் மந்திரம் கேட்டு நீறணிந்த குறிப்பும் இருக்கிறது. "நானறி விச்சையும்" (விச்சை-வித்தை, நானறிந்த வித்தை). பாடல்கள் மூன்று தொடக்கம் ஏழுவரை எமக்கு அன்பான அறிவுரை. பாடல்கள் 5, 7 வீட்டிலே வழிபாடு செய்ய அறிவுரை என்றும் கொள்ளலாம். திருமுறைகள் கீதங்களை ஓங்கி ஒலிக்கப் பாடவேண்டும். எட்டாவது பாடலில் காம இச்சை உட்பட உலக இன்பங்களுக்கு ஆசைப்பட்டுப் பிறவியெடுக்கும் உயிர்களின் அறியாமையைச் சாடுகிறார். பாடல் 9 இல் உண்மையான தடித்த பத்தியின்றி வழிபடுவதைச் சாடி அந்த வழிபாட்டால் பயினில்லை என்றார். பத்தாவது பாடலில் இறைவர் பூசை பண்ணுபவர்க்கு எப்படி எப்போது வெளிப்படுவார் என்பதை மீண்டும் சொல்கிறார். "ஒன்றிலிருந்து நினைமின்கள் உந்தமக்கூனமில்லை" (கோயில் பதிகம்)

நீற்றறை குளிர்ந்ததே!

**நீற்றறையினுள் ஐம்பொறிகட்கு நுகர்வாகிய ஐந்து கேடுகள் அவற்றினால் தாக்கப்படும் பொறிகள்.**

| | | | | |
|---|---|---|---|---|
| வெய்ய ஓசை | வெள்ளியஒளி | நச்சுக்காற்று | மிகு வெப்பம் | சுண்ணாம்புச் சுவை |
| காது | கண் | மூக்கு | மெய் | நா (நாக்கு) |

**இவை அருளாக மாறிக் குளிர்ந்த விதம்**

| | | | | |
|---|---|---|---|---|
| மாசில் வீணை | மாலை மதியம் | வீசு தென்றல் | வீங்கின வேனில் | மூசு வண்டறை |
| யாழ் ஒலி இயற்கையான இன்ப ஓசை | பூரணை நிலா குளிர்ச்சியான ஒளி | மலர்களின் நறுமணமும் வருடும் குளிர்ச்சியும் | உடலின் இயக்கத்துக்கு அளவான இதமான சூடு. | நீரின் இனிய தண்சுவை |

நாயனார் இப்படி ஏழு நாள்கள் நீற்றறையில் "அடிவணங்கி இனிதிருந்தார்". நாயனாருக்கு வெப்பமோ பசி தாகமோ தெரியாதது மட்டுமல்ல அவர் இன்பத்தையே அநுபவித்துக் கொண்டிருந்தார்!

இனி திருத்தல்- சிவானந்தந் திளைத்திருத்தல்- பின் அரசராணைப்படி சமணர் நீற்றறையைத் திறந்தார்கள். நாயனார் ஊனமொன்றின்றியும் தெளிவுடனும் ஒளிவீசும் மேனியுடனும் ஆனந்தமாயிருந்தார் என அரசருக்கு அறிவித்தார்கள். அரசர் அதிசயப்பட்டார். சமணர் சொன்னார், “அரசே இதில் அதிசயம் இல்லை. எங்கள் சமய மந்திர சாதகத்தால் பிழைத்திருக்கிறார். முன்பு எமது குரவர் அல்லவா? இனி இவருக்கு நஞ்சூட்டுவோம்.” சமணமயக்கமும் அதிகார அகங்காரமும் மூடியிருந்த அரசரும் “அப்படியே செய்க” என்றார். திருநாவுக்கரசு நாயனார் திருவடிகள் வாழ்க!

## காயத்திரி மந்திரம்

மனம் என்றைக்கும் போராட்டமாகத் தான் இருக்கின்றது. காலையில் செய்வது மாலையில் தப்பாகத் தெரிகின்றது. மாலையில் தப்பென்று தெரிந்தது காலையில் சரியாகத் தெரிகின்றது. பகவத்கீதையை மீண்டும் மீண்டும் படித்தாலும் மனப்போராட்டத்தைத் தவிர்க்க முடியவில்லை.

மனச்சுத்தம் இருந்தால் எங்கும் என்ன நிலைமையிலும் எவ்விதத்திலும் என்ன மந்திரமும் சொல்லி வணங்கலாமென்று ஒரு பெரியவர் சொன்னதுடன் சாயிபாபா மன்றம் எழுதிய “காயித்திரி மந்திரத்தை எவரும் சொல்லலாம்” என்ற புத்தகத்தைப் படித்த நாள் முதல் நான் காலையிலும் மாலையிலும் எனது வீட்டில் படிக்கட்டில் கீழுள்ள ஒரு சிறய அறையினுள் சுத்தமாக இருந்து மந்திரம் ஜெபிப்பது வழக்கம். ஆனால் கலசத்தில் காயித்திரி மந்திரத்தை அதற்குரிய சிவாசாரியரிடம் விட்டு விடுவது நல்லது என்ற கருத்தை வாசித்து குழம்பி விட்டேன். மனம் குழம்பினால் மகாபாரதம் படிப்பது எனது வழக்கம். மகாபாரதத்தில் நச்சுப் பொய்கையருகில் அசரீரியாகவுள்ள தர்மதேவதை தருமரிடம் பிராமணன் என்பவன் யார்? என்ற கேள்விக்கு “பிறப்பினால் மட்டும் ஒருவன் பிராமணனாகான். எவன் ஒழுக்கமாய் வாழ்கிறானோ அவன்தான் பிராமணன். பிராமணன் என்பது குலத்தினால் அல்ல” என்ற விளக்கம் என் மனதை மேலும் குழப்பிவிட்டது. தப்பு செய்கிறோமா சரிசெய்கிறோமா என்பது தெரியவில்லை.

நானோ சாதாரண ஒருத்தி. சைவத்தையோ அல்லது வேதமறைகளோ ஒழுங்காகக் கற்றவளில்லை. தேவாரமும் ஒன்று இரண்டு தான் தெரியும். பள்ளிக்கூடம் பத்தாம் வகுப்பும் தாண்டியதில்லை. கோயில் குளம் போவதும் மிகக்குறைவு.

எனது புருஷன், எனது பிள்ளைகள் முன்னேற்றம் தான் எனது இரவு பகல் சிந்தனை. நான் வீட்டில் எனது சுத்தமான பூசையறையில் காயித்திரி மந்திரம் ஜெபித்தால் புண்ணியம் கிடைக்காவிட்டாலும் பாவம் கிடைக்கப்போகிறதா? குழம்பியுள்ளேன். தயவு செய்து தெளிவு பண்ணுங்கள்.

**தாவடிக் கனகம்மா**

**ஆசிரியர் குறிப்பு:** *மந்திரம் இராகத்துடன் பாடுவதற்கல்ல. அதற்குரிய உள, உடற் சுத்தியுடன் முறையாகக் கற்று ஓதப்படவேண்டிது. அப்படிக்கற்றபின் ஓதலாம்; ஓதவேண்டும் என்பதையே குறிப்பிட்ட கட்டுரை வலியுறுத்துகிறது. இனி இந்த இதழில் 36ஆம் பக்கத்திலுள்ளதையும் படிக்கவும்.*

# கண்ணனும் தாத்தாவும் - முத்து

தாத்தா கந்தஷஷ்டி விரதமாகையால் காலையில் எழுந்து கடவுளைக் கும்பிட்டதும், கந்தபுராணப் புத்தகத்தை எடுத்துப் படித்துக்கொண்டு இருக்கிறார். கண்ணனுக்கும் இந்தவாரம் பள்ளி விடுமுறை. அவன் தாத்தா கந்தபுராணம் படிப்பதைப் பார்த்துக்கொண்டு இருக்கிறான். தாத்தா சில பாடல்களைப் படித்துவிட்டுப் புத்தகத்தை மூடிவைக்கிறார். பக்கத்தில் கண்ணன் இருப்பதைப் பார்க்கிறார்.

**தாத்தா:** நீ எப்போது வந்தாய் கண்ணா? நான் உன்னைக் கவனிக்கவே இல்லையே!

**கண்ணன்:** நீங்கள் இந்தப் புத்தகத்தைப் படிக்கத் தொடங்கியபோதே வந்துவிட்டேன். நீங்கள் பரீட்சைக்குப் படிப்பதுபோலக் கவனமாகப் படித்துக்கொண்டிருந்தீர்கள், அதனால் உங்களைக் குழப்பவேண்டாமே என்று உங்களுக்குப் பின்னால் இருந்தேன். அது என்ன புத்தகம் தாத்தா?

**தாத்தா:** அதுதான் கந்தபுராணம் என்ற புத்தகம். இப்போது கந்தசட்டி விரதம் நடக்கிறது. அப்போது முருகப்பெருமானைக் கும்பிட்டு விரதம் இருப்பது வழக்கம். முருகன் எப்படித் தோன்றினார், ஏன் தோன்றினார், சூரபதுமன் என்ற அரக்கனை அழித்தார் என்பனபோன்ற பல விடயங்கள் கொண்ட புத்தகம் கந்தபுராணம். பல கதைகள் மூலம் சைவசமயக் கருத்துக்கள், தத்துவங்களைக் கூறும் புத்தகம்.

**கண்ணன்:** எல்லாம் தேவாரங்களைப்போல் பாடல்களாகத் தெரிகிறதே?

**தாத்தா:** ஆமாம் கண்ணா! இந்தப் புத்தகத்தில் பத்தாயிரத்து முன்னூற்று நாற்பது (10340) பாடல்கள் உள்ளன. முற்காலத்தில் எழுதப்பட்ட கதைகள், காப்பியங்கள், புராணங்கள், இதிகாசங்கள் எல்லாமே பாடல்களாகத்தான் எழுதப்பட்டன. கிட்டத்தட்ட இருநூறு ஆண்டுகளுக்கு முன்புதான் உரைநடையில் (வசனங்களில்) எழுதத் தொடங்கினார்கள்.

**கண்ணன்:** இப்படிப் பாடல்கள் என்றால், படித்துப் புரிந்துகொள்வது கஷ்டமே தாத்தா!

**தாத்தா:** இப்போது எல்லாரும் படித்துப் புரிந்துகொள்ளக் கூடியதாகத் தமிழ் அறிஞர்கள் பாடல்களின் பொருளை உரைநடையில் எழுதியுள்ளார்கள். நீயும் பெரியவனானதும் படித்து அறியலாம்.

**கண்ணன்:** தேவார திருவாசகங்கள், புராணங்கள், இதிகாசங்கள் என்று நிறைய இருக்கிறதே! இவற்றையெல்லாம் ஒருவரால் படித்து முடிக்கமுடியுமா தாத்தா?

**தாத்தா:** முடிந்தளவு ஒருவர் படிக்கலாம், படித்தவர்களிடம் கேட்டு அறியலாம். அதுதான் “கற்றது கைம்மண்ணளவு, கல்லாதது உலகளவு” என்று சொல்வார்கள்.

**கண்ணன்:** இந்தப் பழமொழியைக் கொஞ்சம் விளக்கமாகச் சொல்லுங்கோ தாத்தா.

**தாத்தா:** கண்ணா! ஒருவர் எவ்வளவுதான் முயற்சி செய்தாலும் உலகத்திலுள்ள எல்லாவற்றையும் படித்தறிய முடியாது. உதாரணமாக ஒரு மருத்துவருக்கு ஒரு வழக்கறிஞருக்குத் தெரிந்த சட்டங்கள் தெரியாது. அதேபோல, வழக்கறிஞருக்கு மருத்துவம் பற்றித் தெரியாது. இப்படி ஒவ்வொருவரும் கொஞ்சந்தான் கற்றுக்கொள்ள முடிகிறது. இவ்வளவு ஏன்? ஒரு தமிழ் ஆசிரியரே தமிழிலுள்ள அத்தனை புத்தகங்களையும் படித்து முடிக்க முடியாது.

**கண்ணன்:** ஆமாம் தாத்தா, கற்றுக்கொள்ளாத விடயங்கள் நிறையவே இருக்கின்றன.

**தாத்தா:** ஊரில் கந்தசட்டி, நவராத்திரி, திருவிழாக் காலங்களிலே சமயப் பெரியார்கள் கோயில்களிற் சொற்பொழிவு செய்வார்கள்.

**கண்ணன்:** எதைப்பற்றியெல்லாம் சொற்பொழிவு செய்வார்கள்?

**தாத்தா:** கந்தபுராணம், இராமாயணம், மகாபாரதம், திருவிளையாடற்புராணம், நாயன்மாரின் வரலாறு இவற்றையெல்லாம் கேட்டுக்கொண்டிருப்போருக்கு விளங்கும்படி நன்றாகச் சொல்வார்கள்.

**கண்ணன்:** புத்தகங்களைப் படிக்காமலே பல கதைகளையும் அறிந்துகொள்ளலாம். இல்லையா தாத்தா?

**தாத்தா:** கதைகளை மட்டுமல்லாது தாம் அறிந்த நல்ல கருத்துக்களையும் சேர்த்துச் சொல்வார்கள். சிலர் மக்களைச் சிரிக்கவைத்து பல நகைச்சுவைக் கதைகளையும் சொல்லி சிந்திக்க வைப்பார்கள்.

**கண்ணன்:** அப்போ சபையோரும் அலுப்புத்தட்டாமல் கவனிப்பார்கள். என்ன தாத்தா?

**தாத்தா:** சரியாகச் சொன்னாய் கண்ணா! சிலர் அப்படிக் கதை கேட்பதற்காகவே பிரசங்கம் கேட்கப் போவார்கள். இப்படி அடிக்கடி நல்ல சொற்பொழிவுகளைக் கேட்பதால் மக்களுக்கு சமய அறிவும் நன்றாக வளர்ச்சியடைந்தது.

**கண்ணன்:** சிறுவர்களும் வந்து கேட்பார்களா தாத்தா?

**தாத்தா:** சிறுவர்கள், பெரியவர்கள், பெண்கள், இளவயதினர் என்று எல்லோருமே வருவார்கள். இதனால் மக்களுக்குச் சமயப்பற்று, பத்தி எல்லாமே சிறுவயதிலிருந்தே நன்றாக மனதிற் பதிந்துவிடுகிறது.

**கண்ணன்:** இந்த ஊரில் அப்படி இல்லையென்று சொல்ல வருகிறீர்கள். என்ன தாத்தா? அப்படித்தானே!

**தாத்தா:** ஆமாம் கண்ணா! அதை நினைக்க என் மனதுக்கு வருத்தமாகவும் இருக்கிறது. இலண்டனில் இப்போது முப்பதுக்கு மேற்பட்ட கோயில்கள் கட்டப்பட்டுவிட்டன. பூசைகள், திருவிழாக்கள் எல்லாம் நன்றாகவே நடைபெறுகின்றன. ஆனாலும் மக்களுக்கு சமயத்தைப்பற்றிய தெளிவான அறிவு இல்லை. அதனால் உண்மையான பத்தியோ சமய நம்பிக்கையோ இல்லாமல் இருக்கிறது.

**கண்ணன்:** அதற்கு என்ன செய்யலாம் தாத்தா? உங்களைப்போன்ற பெரியவர்கள்தான் இதற்கு வழிவகை சொல்லவேண்டும்.

**தாத்தா:** இந்த ஊரில் மக்களுக்குப் புத்தகங்களை இருந்து வாசிக்க நேரமில்லை. ஆனபடியால் கோயில்களில் வெள்ளிக்கிழமை, விசேட நாள்களில் சமய அறிவை வளர்க்கும்படியான நல்ல சொற்பொழிவுகளை ஒழுங்கு செய்யவேண்டும். சமயத் தத்துவங்களை நன்றாக மக்கள் புரியும்படி செய்தல்வேண்டும். சைவசமயத் தத்துவங்களை அறிந்துகொள்வதால் நிம்மதியாக, சந்தோஷமாக வாழ முடியும் என்பதை மக்களுக்கு உணரவைக்க வேண்டும்.

**கண்ணன்:** அதனால் மக்களுக்கு சமயத்தைப்பற்றி மேலும் அறியவேண்டும் என்ற ஆர்வம் ஏற்படும். சமய அறிவும் தானாகவே வளரும். ஆனால் ஒன்று தாத்தா?

**தாத்தா:** அது என்னடா கண்ணா? சொல் பார்க்கலாம்

**கண்ணன்:** கோயிலுக்கு வரும் எல்லோருக்கும் தமிழ் தெரியாதே! பெரும்பாலான தமிழ்ப் பிள்ளைகளுக்குத் தமிழ் தெரியாது. தமிழ் பேசாத வேற்று மொழிபேசும் இந்துக்களும் வருகிறார்களே! அதனால் ஆங்கிலத்திலே இந்தச் சொற்பொழிவை வைத்தாலென்ன?

**தாத்தா:** அப்படியா? அதுவும் யோசிக்கவேண்டிய விடயந்தான். தமிழிலும் ஆங்கிலத்திலும் வைக்கலாம். ஆங்கிலத்தில் மட்டும் வைத்தால் தமிழை மக்கள் மறந்துவிடுவார்கள்.

**கண்ணன்:** தாய்மொழியை மறக்கக்கூடாது தாத்தா. அது தாயை மறப்பது போலாகும் என்று தமிழ்ப்பள்ளிக்கூடத்திலே படித்திருக்கிறேன். அப்போ, ஆங்கிலம் தமிழ் இரண்டிலும் சொற்பொழிவு செய்யலாம். சிறு துண்டுப் பிரசுரங்களையும் அச்சிட்டுக் கொடுக்கலாம்.

**தாத்தா:** எதைப்பற்றித் துண்டுப்பிரசுரங்கள் அடிக்கவேண்டும் என்கிறாய்?

**கண்ணன்:** கோயிலுக்கு எப்படி வரவேண்டும், கோயிலை எத்தனை முறை வலம் வரவேண்டும், கோயிலில் எப்படி நடந்துகொள்ளவேண்டும், எப்படி வழிபாடு செய்யவேண்டும் என்று பல விடயங்கள் பலருக்கும் தெரியாது தாத்தா.

**தாத்தா:** என்னைவிட நீ அதிகமாகவே தெரிந்து வைத்திருக்கிறாய் கண்ணா!

**கண்ணன்:** ஏதோ கொஞ்சம் தெரியும் தாத்தா. நேரம் பதினொரு மணியாகிறது. காலைச்சாப்பாடு இன்னும் சாப்பிடவில்லை. சாப்பிடுவோம் தாத்தா.

**தாத்தா:** நான் விரதம். நீ போய்ச் சாப்பிடு கண்ணா!

# திருக்குறள் கற்போம்

# Let us Learn Thirukkural

## அவையஞ்சாமை - அதிகாரம் -73

## Confidence before an Audience

1. வகையறிந்து வல்லவை வாய்சோரார் சொல்லின்
தொகையறிந்த தூய்மை யவர்.

சொல்லின் தொகையறிந்த தூய்மையினை உடையவர் அவையின் வகைகளை அறிந்து, வல்லவர் கூடிய அவையகத்து அச்சத்தால் வாய்தவறிக் குற்றமாகப் பேசமாட்டார்.
The pure who know the classification of words having first ascertained the nature (of the court) will not (through fear) falter in their speech before that powerful body.

2. கற்றாருள் கற்றார் எனப்படுவர் கற்றார்முன்
கற்ற செலச்சொல்லு வார்.

கற்றவர்களுள் மிகச் சிறந்த கற்றவர் எனப்படுபவர் கற்றவர் கூட்டத்தில் தாம் கற்றவற்றை அஞ்சாது, கேட்பவர் மனங்கொள்ளும் வகையில் பேச வல்லவரே.
Those who can agreeably set forth their acquirements before the learned will be regarded as the most learned among the learned.

3. பகையகத்துச் சாவார் எளியர் அரியர்
அவையகத்து அஞ்சா தவர்

கற்றார் நிறைந்த அவையில் பேசுதற்கு அஞ்சாதவரை நோக்கும் போது, அவரே அருஞ்செயலாற்றிய ஆற்றல் மிக்கவர். அவரை நோக்கும்போது, போர்க்களத்துப் பகைவரிடை அஞ்சாமற் சென்று பொருது மாய்ந்தவர் எளியவரே.
Many indeed may (fearlessly) die in the presence of (their) foes; (but) few are those who are fearless in the assembly of the learned.

4. கற்றார்முன் கற்ற செலச்சொல்லித் தாம்கற்ற
மிக்காருள் மிக்க கொளல்

தாம் கற்றவற்றைப் பல நூல்களையும் கற்றார் அவையில் உளங்கொள்ளச் சொல்லித் தம்மினும் மிகக்கற்ற பேரறிஞரிடத்து மிக்க பொருள்களை அறிந்து கொள்க.
Ministers should agreeabley set forth their acquirement before the learned and acquire more (knowledge) from their superiors (In learning).

5. ஆற்றின் அளவறிந்து கற்க அவையஞ்சா
மாற்றம் கொடுத்தற் பொருட்டு

அவையில் ஒன்றைக் கேட்டார்க்கு அஞ்சாமல் மறுமாற்றம் கொடுத்தற்காக, நெறிப்படி அளவை நூல்களை (தருக்க நூல்களை) அறிந்து தெளிவாகக் கற்க வேண்டும்.

# திருக்குறள் கற்போம்

# Let us Learn Thirukkural

## அவையஞ்சாமை - அதிகாரம் -73

## Confidence before an Audience

1. வகையறிந்து வல்லவை வாய்சோரார் சொல்லின்
தொகையறிந்த தூய்மை யவர்.

சொல்லின் தொகையறிந்த தூய்மையினை உடையவர் அவையின் வகைகளை அறிந்து, வல்லவர் கூடிய அவையகத்து அச்சத்தால் வாய்தவறிக் குற்றமாகப் பேசமாட்டார்.
The pure who know the classification of words having first ascertained the nature (of the court) will not (through fear) falter in their speech before that powerful body.

2. கற்றாருள் கற்றார் எனப்படுவர் கற்றார்முன்
கற்ற செலச்சொல்லு வார்.

கற்றவர்களுள் மிகச் சிறந்த கற்றவர் எனப்படுபவர் கற்றவர் கூட்டத்தில் தாம் கற்றவற்றை அஞ்சாது, கேட்பவர் மனங்கொள்ளும் வகையில் பேச வல்லவரே.
Those who can agreeably set forth their acquirements before the learned will be regarded as the most learned among the learned.

3. பகையகத்துச் சாவார் எளியர் அரியர்
அவையகத்து அஞ்சா தவர்

கற்றார் நிறைந்த அவையில் பேசுதற்கு அஞ்சாதவரை நோக்கும் போது, அவரே அருஞ்செயலாற்றிய ஆற்றல் மிக்கவர். அவரை நோக்கும்போது, போர்க்களத்துப் பகை-வரிடை அஞ்சாமற் சென்று பொருது மாய்ந்தவர் எளியவரே.
Many indeed may (fearlessly) die in the presence of (their) foes; (but) few are those who are fearless in the assembly of the learned.

4. கற்றார்முன் கற்ற செலச்சொல்லித் தாம்கற்ற
மிக்காருள் மிக்க கொளல்

தாம் கற்றவற்றைப் பல நூல்களையும் கற்றார் அவையில் உளங்கொள்ளச் சொல்லித் தம்மினும் மிகக்கற்ற பேரறிஞரிடத்து மிக்க பொருள்களை அறிந்து கொள்க.
Ministers should agreeabley set forth their acquirement before the learned and acquire more (knowledge) from their superiors (In learning).

5. ஆற்றின் அளவறிந்து கற்க அவையஞ்சா
மாற்றம் கொடுத்தற் பொருட்டு

அவையில் ஒன்றைக் கேட்டார்க்கு அஞ்சாமல் மறுமாற்றம் கொடுத்தற்காக, நெறிப்படி அளவை நூல்களை (தருக்க நூல்களை) அறிந்து தெளிவாகக் கற்க வேண்டும்.

In order to reply fearlessly before a foreign court, (ministers) should learn logic according to the rules (of grammar)

6. வாளொடென் வன்கண்ணர் அல்லார்க்கு நூலொடென்
நுண்ணவை அஞ்சு பவர்க்கு

அஞ்சாத மறவர் அல்லாதார்க்கு வாளினால் என்ன பயன்? அதுபோல், மதிநுட்பமுடையார் அவையைக் கண்டு அஞ்சுவார்க்குக் கற்ற நூலினால் என்ன பயன்?
What have they to do with a sword who are not valiant, or they with learning who are afraid of an intelligent assembly?

7. பகையகத்துப் பேடிகை ஒள்வாள் அவையகத்து
அஞ்சு மவன்கற்ற நூல்

பகை நடுவே சண்டையிட நிற்கும் பேடியின் கையிலுள்ள கூரிய வாள் பயன்படாமல் சிறப்பிழத்தல் போல, அவையிடத்தே பேச அஞ்சுபவன் கற்ற சிறந்த நூலும் பயன்படாமல் சிறப்பிழக்கும்.
The learning of him who is diffident before an assembly is like the shining sword of an hermaphrodite in the presence of his foes.

8. பல்லவை கற்றும் பயமிலரே நல்லவையுள்
நன்கு செலச்சொல்லா தார்

நல்லோர் கூடிய அவையில் தெளிவாகக் கேட்பார் மனத்திற்பதியுமாறு அச்சத்தால் பேச இயலாதவர் பல நூல்களைக் கற்றறிந்தாலும் உலகிற்குப் பயன்படமாட்டார்.
Those who cannot agreeably speak good things before a good assembly are indeed unprofitable persons in spite of all their various acquirements.

9. கல்லா தவரின் கடையென்ப கற்றறிந்தும்
நல்லார் அவையஞ்சு வார்

பல நூல்களைக் கற்றறிந்த போதிலும் நல்லவர் கூடிய அவைக்கு அஞ்சுபவர் கல்லாதவரினும் இழிந்தோராவார்.
They who, though they have learned and understood are yet afraid of the assembly of the good are said to be inferior (even) to the illiterate.

10. உளரெனினும் இல்லாரொடு ஒப்பர் களன் அஞ்சிக்
கற்ற செலச்சொல்லா தார்

அவைக்களத்திற்கு அஞ்சித் தாம் கற்றவற்றைக் கேட்போர் மனம் கொள்ளச் சொல்ல இயலாத வர், உயிர் வாழ்கின்றார் எனினும் இறந்தாரோடு ஒப்பாவர்.
Those who through fear of the assembly, are unable to set forth their learning in an interesting manner, though alive, are yet like the dead.

உரை: தமிழ் - முனைவர் இரா சாரங்கபாணி ஆங்கிலம் - Rev Drew & John Lazarus

# Hinduism in search of answers...

## IDOLS

(Continued from last issue)

How can any one see the God in Stone statue?

Idol is a support for the novice in the spiritual path. It is a prop of his spiritual childhood. A concrete form is necessary for the vast majority for practising concentration. The worshipper will have to associate with the idol the ideas of infinity, omnipotence, omniscience, purity, perfection, freedom, holiness, truth and omnipresence. It is not possible for all to fix the mind on the Absolute or the Infinite. To behold God everywhere and to practice the presence of God is not possible for the ordinary man. Idol worship is the easiest form of worship for the modern man.




Idol worship is not peculiar to Hinduism. It is the expression of exuberance of religious sentiment at a particular stage of its development world over. Child humanity cannot help thinking in terms of images. Even the professed iconoclasts (people opposed to image worship) are idolators without their knowing it. Every religion has some sort of symbol worship. Muslims at Mecca pray in front of 'Kaba'. Christians in front of Jesus, Mary or a Cross. The idol is only a token for the supreme, a symbol for divine.

When a Hindu worships an idol, he does not see therein a block of stone or mass of metal; to his eye it appears as an emblem of God. Hinduism does not say to worship any particular idol. Absolute power (God) is Nirguna (beyond character, colour, form, name). This is what Hinduism illustrates.

### What are the features of Lord Vishnu?

The word Vishnu means 'the one who pervades'. He is represented as Dark blue in colour indicating his infinite stature, like infinite sky. Vishnu represents the power of sustenance. In order to maintain anything, the maintainer must possess wealth. Hence Vishnu is wedded to the goddess of wealth, Lakshmi.

Vishnu is depicted as lying on a great (thousand headed) serpent called 'Sesha' or 'Anantha', in an ocean of milk, in heaven 'Vaikuntha'.



The ocean represents the mind with its waves of thoughts. Milky ocean represents the 'satvic' mind – i.e, pure and serene. The other two states of mind are 'rajasic' (agitated) and 'tamasic' (dull). In the latter two states of mind, man gets involved in the mundane world. The satvic mind lifts man to the higher realm of divinity.

The serpent represents the ego. When the ego turns its attention inward and concentrates upon the inner Self, instead of outer objects of the world, it recognises the Supreme – the Atman within. Vishnu lying on the serpent depicts how the Atman can have control of the ego. Lakshmi, the goddess of wealth, serves Vishnu. This means that when man seeks the Truth - Vishnu-, Lakshmi seeks him.

The manifest world emerging from the un-manifest Reality is illustrated by Brahma, the god of creation, emerging from the navel of Vishnu. This was further explained in the last issue of Kalasam.



In another form of Vishnu, he stands on a lotus with his four arms. He holds a Conch, discus, mace, and lotus flower.

The conch shell stands for Vishnu's call to humanity to lead a life of austerity so that they may shift their attention from the material world to the Supreme Self. A conch shell is often blown at the start of Hindu Ceremonies, and its deep powerful note is associated with the primeval sound OM, which is said to contain all of creation potential.

The mace is a warning to man that if he persists in sensual indulgences and does not turn towards the spiritual path, he faces disaster.

The spinning Chakra represents the intellect whose thoughts fly swifter than the wind. Thus the intellect is viewed positively as an instrument of liberation. The prodigious power of intellect can destroy all forms of ignorance; hence the Chakra is the fearful weapon that cuts off the heads off all demons, of all errors.

Finally the lotus indicates the final goal of human evolution – realisation of the Self. Just as the lotus rises from the muddy depths, as an image of purity opening to the light of the sun, so too the man should arise from his ignorance and realise the eternal truth.

## Why do we worship tulasi?

(In Sanskrit) tulanaa naasti athaiva tulasi - that which is incomparable (in its qualities) is the tulasi. For Hindus, it is one of the most sacred plants. In fact it is known to be the only plant used in worship, which, once used, can be washed and reused in pooja - as it is regarded so self-purifying.

As one story goes, Tulasi was the devoted wife of Shankhachuda, a celestial being. She believed that Lord Krishna tricked her into sinning. So she cursed him to become a stone (shaaligraama). Seeing her devotion and adherence to righteousness, the Lord blessed her saying that she would become the worshipped plant, and that tulasi would adorn His head.



She also symbolises Goddess Lakshmi, the consort of Lord Vishnu. Those who wish to be righteous and have a happy family life worship the tulasi.

Satyabhama once weighed Lord Krishna against all her legendary wealth. The scales did not balance until Rukmini placed a single tulasi leaf along with the wealth on the scale with devotion.

Thus the tulasi played the vital role of demonstrating to the world that even a small object offered with devotion means more to the Lord than all the wealth in the world. The tulasi leaf has great medicinal value and is used to cure various ailments, including the common cold.

**Yanmule sarvatirhaani, Yannagre sarvadevataa**
**Yanmadhye sarvavedaascha, Tulasi taam namaamyaham**

I bow down to the tulasi, At whose base are all the holy places, At whose top reside all the deities and, In whose middle are all the Vedas.


- Swami Chinmayananda


There are two types of Tulasi, the black and the white. The black tulasi is known as the Krishna Tulasi and the White tulasi as the Rama Tulasi.


Tulasi, decreases Vata and Kapha and increases Pitta and it is acted in plasma, blood, marrow and nerves, reproductive and respiratory, nervous and digestive Systems.


It is benefited in ailments like colds, cough, sinus congestion, headaches, arthritis, rheumatism, abdominal distention, flu and reduces fat, strengthens the heart, prevent nausea, cancer, leukaemia, removes toxins, increases semen, promotes tranquility, depression etc.

# Thiruvalluvar




Valluvar exhorted the king in his senses in the morning.
may drink if you don't want
ect from revered people, You
uld live with Kopperundhevi
h decorum. That is dignity.
Will not drink and touch other women henceforth. I swear by you.
Devoid of wealth due to vices, Nagavel demanded ten thousand gold coins from the king who refused.
Uncle, I beg you to intervene and recommend on my behalf.
The Goddess of wealth will come to those only who don't covet other's wealth, due to virtue.
your preachings! Pandiyan's
ce, refuge for recluses!
You are verbally abusing Valluvar!?
You are Mistreating Your own friend!?


One evening, in the palace prayer room, Villavan stood before Uggiraperuvazhuthi with folded hands and tears.
Villavan, tears in your eyes? What happened?
In his folded hands, a knife is hidden and in tears, your blood.
Villavan, who incited you to assassinate the king?
One day, I had no money for drink. Nagavel gave me ten gold coins. He got me appointed as king's bodyguard to murder him.
Unscrupulous person, unfit for anything, Sold yourself to Nagavel for ten gold coins for the pleasure of drink!




courtesy: International Tamil Language Foundation (To be Continued)

# BUTTERFLY

## Florist & Marquees





இறுதிக்கிரியைகளுக்கான மலர் வளையங்கள்
தமிழிலும் ஆங்கிலத்திலும் செய்து கொடுக்கப்படும்.




Address:

**BUTTERFLY LTD**

Unit: 133 Carlyle Road, Manor Park, London, E12 6BS

# Tel: 020 8553 0527

Part of Party Paradise Group PARTY PARADISE




இலண்டனில் வாசன் அச்சகத்தினரால் (தொலைபேசி : 020 8646 2885) வடிவமைத்து, அச்சிடப்பட்டு,
சைவ முன்னேற்றச் சங்கத்தால் 10-08-2008 அன்று வெளியிடப்படுகிறது.